தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்
# பேப்பர்பாய்
www.paperboy.biz
VAIGARAIYIL PAPERBOY

Advertise Your Business
MAKE YOUR BUSINESS KNOWN TO ALL

சென்னை மலர்: 01 இதழ்: 224 27.03.2026 வெள்ளிக்கிழமை
Chennai Volume: 01 Issue: 224 Friday pages 8 Rs.5/-
DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

வெள்ளிக்கிழமை
(27-03-2026)
விசுவாவசு ஆண்டு, பங்குனி-13
பிறை: வளர்பிறை
திதி
நவமி நண்பகல் 12.52 வரை
பிறகு தசமி
நட்சத்திரம்:
புனர்பூசம் மாலை 5.48 வரை
பிறகு பூசம்
யோகம்
சித்த/மரணயோகம்
ராகுகாலம்
காலை 10.30-12.00 மணி
எமகண்டம்
பிற்பகல் 3.00-4.30 மணி.
சூலம் - மேற்கு
நல்ல நேரம் :
காலை 6-7 மணி.
மாலை 5-6 மணி.

| | |
|---|---|
| மேஷம் | சாந்தம் |
| ரிஷபம் | கீர்த்தி |
| மிதுனம் | ஆதரவு |
| கடகம் | இன்பம் |
| சிம்மம் | வெற்றி |
| கன்னி | துணிவு |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | மேன்மை |
| தனுசு | தெளிவு |
| மகரம் | ஜெயம் |
| கும்பம் | களிப்பு |
| மீனம் | வரவு |

# ஈரான் புதிய உச்சத்தலைவராக தலைமையேற்க அழைத்தது!: டிரம்ப்

**வாஷிங்டன், மார்ச் 27:**

கமேனியின் மறைவுக்குப் பின்னர், ஈரானின் புதிய உச்சத்தலைவராக மோஜ்தபா கமேனி தேர்வு செய்யப்பட்டு, அவரின் தலைமையின் கீழ் ஈரான் ராணுவத்தினர் செயல்பட்டு வருகின்றனர். மேலும், கமேனி கொல்லப்பட்டதற்கு அமெரிக்காவைப் பழித்தீர்ப்போம் என மோஜ்தபாவும் உறுதி எடுத்துள்ளார்.

இந்த நிலையில், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் புதிய கருத்து ஒன்றை தெரிவித்து மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார். கமேனியின் மறைவுக்குப் பின்னர் தன்னை இஸ்லாமிய குடியரசான ஈரானை தலைமையேற்க அழைத்ததாகவும், 'இல்லை வேண்டாம்' என அவர் மறுத்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் தலைநகர் வாஷிங்டன் டிசியில் நேற்று நடைபெற்ற குடியரசுக் கட்சியினரின் நிதி திரட்டும் நிகழ்ச்சியில் அதிபர் டிரம்ப் பேசினார்.

நிகழ்ச்சியில் டிரம்ப் பேசுகையில், "இஸ்லாமியக் குடியரசான ஈரானின் அடுத்த உச்சத்தலைவராகத் தான் வர வேண்டும் என்ற யோசனையை ஈரான் தலைமை முன்வைத்தது. ஆனால், நான் அதை நிராகரித்துவிட்டேன்" என்றார். கமேனியின் மறைவுக்குப் பின்னர், அவரது மகன் மோஜ்தபா கமேனி தலைமையேற்றிருந்தாலும், அவர் காயத்தால் ஒரு காலை இழந்ததாகவும், அவர் கோமாவில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதுமட்டுமின்றி, இதுவரை அவர் ஒருமுறைகூட பொதுவெளியில் தோன்றவில்லை. அமெரிக்க தாக்குதல்களில் ஈரானின் பல உயர்நிலைத் தலைவர்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, அங்கு நிலவும் அதிகார வெற்றிடத்திற்கு மத்தியில் டிரம்ப்பின் இத்தகைய கருத்துகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன.



> கமேனியின் மறைவுக்குப் பின்னர் தன்னை இஸ்லாமிய குடியரசான ஈரானை தலைமையேற்க அழைத்ததாகவும், 'இல்லை வேண்டாம்' என அவர் மறுத்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

# ஆந்திரத்தில் கோர விபத்து: லாரி மீது சொகுசு பேருந்து மோதிய விபத்தில் 13 பேர் பலி!

**ராயவரம், மார்ச் 27:**

ஆந்திரம் மாநிலம், மார்காபுரம் மாவட்டம் ராயபுரம் அருகே வியாழக்கிழமை அதிகாலை டிப்பர் லாரி மீது சொகுசு பேருந்து மோதிய கோர தீ விபத்தில் 13 பேர் பலியாகினர் மற்றும் சுமார் 18 பேர் காயமடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

ஆந்திரம் மாநிலம், ஹைதராபாத்தில் இருந்து பாமூர் நோக்கி சென்ற தனியார் பயணிகள் சொகுசு பேருந்து ஒன்று மார்காபுரம் மாவட்டம் ராயபுரம் கல்குவாரிகள் அருகே வியாழக்கிழமை அதிகாலை டிப்பர் லாரி மீது மோதி விபத்துக்குள்ளானது. இதில் பேருந்து தீப்பிடித்து எரிந்தது. பேருந்து தீப்பிடித்து எரிவதை அறிந்த பயணிகள் சிலர் பேருந்து கண்ணாடிகளை உடைத்துக் கொண்டு வெளியே குதித்து உயிர்தப்பிய நிலையில் 13 பேர் உயிருடன் பேருந்து தீயில் சிக்கி பலியாகினர்.



லேசான காயங்களுடன் உயிர்தப்பிய 18 பேர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த கோர விபத்து தொடர்பாக போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றன என்று மார்காபுரம் துணை காவல் கண்காணிப்பாளர் நாகராஜு ஒரு தொலைக்காட்சி சேனலுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

பேருந்து தீ விபத்தில் பலியானவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணவும், அவர்களது உறவினர்களின் விவரங்களைச் சேகரிக்கும் பணியில் மீட்புக் குழுவினர் ஈடுபட்டு வருகின்றன, சரிபார்ப்பு முடிந்தவுடன் அவர்களுக்குத் தகவல் தெரிவிக்கப்படும் என்று அவர் கூறினார்.

விபத்தைத் தொடர்ந்து தீப்பிடித்த பேருந்தினுள் சில உடல்கள் இன்னும் சிக்கியிருக்கலாம் என நம்பப்படுவதால், மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக நாகராஜு கூறினார்.

இதற்கிடையில், அந்த மாநில முதல்வர் என். சந்திரபாபு நாயுடு இந்த விபத்து குறித்து அதிர்ச்சி தெரிவித்ததோடு, உயிரிழப்புகளுக்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.

## காங்கிரஸ் கட்சியின் 48 ஆண்டு கால தலைமை அலுவலகத்தை காலி செய்ய உத்தரவு

**புதுடெல்லி, மார்ச் 27:**

டெல்லியில் 24, அக்பர் சாலையில் உள்ள காங்கிரஸ் தலைமை அலுவலகத்தை வரும் சனிக்கிழமைக்குள் காலி செய்யுமாறு மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

# மத்திய அரசு அறிக்கையின்படி தமிழகத்தில் 82.5% பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள்

## நாட்டிலேயே முதலிடம் என தமிழக அரசு பெருமிதம்

**சென்னை, மார்ச் 27:**

தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: கடந்த 2024-25-ம் ஆண்டுக்கான மத்திய அரசின் ஒருங்கிணைந்த மாவட்டக் கல்வி ஆய்வு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, தமிழகத்தில் 82.5 சதவீத அரசுப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் அமைந்துள்ளன.

திறன்மிகு வகுப்பறைகளை கொண்டுள்ளதில் தமிழகம் இந்தியாவில் முதலிடம் பிடித்து சாதனை படைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், பாஜக ஆட்சி செய்யும் மாநிலங்களில் உள்ள பள்ளிகளில், திறன்மிகு வகுப்பறைகள் எண்ணிக்கை மிக மிகக் குறைவாகவே இருப்பதை இந்த அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது. அதாவது, குஜராத்தில் 57.1 சதவீதம், மத்தியப் பிரதேசத்தில் 7.6 சதவீதம், மகாராஷ்டிராவில் 4.6 சதவீதம், உத்தரப் பிரதேசத்தில் 3.6 சதவீதம் பள்ளிகளில் மட்டுமே திறன்மிகு வகுப்பறைகள் உள்ளன.

திமுக ஆட்சி 2021-ல் பொறுப்பேற்ற நிலையில், தமிழகத்தில் 43.5 சதவீத பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் இருந்தன. தற்போது 99 சதவீத பள்ளிகளில் இணையதள வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2024-25-ல் 82.5 சதவீத பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் அமைந்துள்ளன. மத்திய அரசு வெளியிட்டு வரும் ஆய்வறிக்கைகள் தமிழகம் முதலிடத்தில் இருப்பதை தொடர்ந்து வெளிப்படுத்தி வருகின்றன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# இன்று முதல் 2 நாட்களுக்கு வெப்பம் 4 டிகிரி உயர வாய்ப்பு

**சென்னை, மார்ச் 27:**

வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் இன்று வறண்ட வானிலை நிலவக்கூடும். மார்ச் 28-ம் தேதி முதல் 31-ம் தேதிவரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பை ஒட்டியே இருக்கக் கூடும். இன்று முதல் அடுத்த 2 நாட்களுக்கு தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் 2 முதல் 4 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்கக் கூடும்.

# 4 நாட்கள் மட்டுமே வேட்பு மனு தாக்கல்: தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா

**சென்னை, மார்ச் 27:**

"தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 4 நாட்கள் மட்டுமே வேட்பு மனு தாக்கல் செய்ய முடியும்" என மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் கடந்த மார்ச் 15-ம் தேதி அறிவிக்கப்பட்டது. அதன்படி, வேட்பு மனு தாக்கல் மார்ச் 30-ம் தேதி தொடங்குகிறது. வேட்பு மனு தாக்கல் செய்ய கடைசி நாள் ஏப்.6 ஆகும். இதற்கிடையில், மார்ச் 31 (மகாவீர் ஜெயந்தி), ஏப்.1 (வங்கி விடுமுறை), ஏப்.3 (புனித வெள்ளி), ஏப்.5 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய 4 நாட்கள் விடுமுறை என்பதால் அந்த 4 நாட்களில் வேட்பு மனு தாக்கல் செய்ய முடியாது. இதர 4 நாட்கள் மட்டுமே வேட்பு மனு தாக்கல் செய்ய முடியும் என்று தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

மேலும், வேட்பு மனுக்களை காலை 11 முதல் பிற்பகல் 3 மணி வரை வழங்கலாம். வேட்பு மனுக்கள் பரிசீலனை ஏப்.7-ம் தேதி நடைபெறுகிறது. வேட்பு மனுக்களைத் திரும்பப் பெற ஏப்.9-ம் தேதி கடைசி நாள்.




இதற்கிடையே, மத்திய அரசின் பத்திரிகை தகவல் அலுவலகம் தொகுத்து தயாரித்துள்ள தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் -2026 கையேடு வெளியீட்டு விழா சென்னையில் நேற்று நடைபெற்றது. இந்தக் கையேட்டை தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா வெளியிட்டு பேசியதாவது:

தமிழக தேர்தல் சுதந்திரமாகவும், வெளிப்படையாகவும் நடைபெற தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தேர்தல் ஆணையம் எடுத்து வருகிறது. குறிப்பாக நகர்ப்புறங்களில் வாக்குப்பதிவு சதவீதம் குறைவாக உள்ளது. அதை அதிகரிக்க ஊடகங்கள் முக்கியப் பங்காற்ற வேண்டும். சமூக ஊடகங்களில் போலி செய்திகளைத் தடுக்க வேண்டும். ஊடகங்கள் ஊடக நெறி தவறாமல் உண்மையான செய்திகளை வெளியிட வேண்டும்.

இந்த தேர்தல் கையேடு, தேர்தல் தொடர்பான அனைத்து தரவுகளையும், தகவல்களையும் கொண்டுள்ளது. தேர்தல் நடத்தை விதிகள், தேர்தல் பணிகள், கடந்த கால தேர்தல் குறித்த புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் பண்டைய குடவோலை முறை தொடங்கி தற்போது வரையிலான தேர்தல் குறித்த அனைத்து வரலாற்று தகவல்களையும் உள்ளடக்கியதாக இந்த கையேடு உருவாக்கப்பட்டுள்ளது. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் தாக்கம் அதிகரித்துள்ள இந்த சூழலில், சமூக வலைதளங்களில் பரப்பப்படும் போலி செய்திகளைத் தவிர்த்து அதன் உண்மைத் தன்மையை உறுதி செய்த பின்னரே ஊடகங்கள் வெளியிட வேண்டும். இவ்வாறு அர்ச்சனா பட்நாயக் பேசினார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, "பல்வேறு வியாபாரிகள் சங்கங்கள் கையில் கொண்டு செல்லும் பணத்தின் அளவு ரூ.50 ஆயிரமாக இருப்பதை அதிகரிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். நாங்களும் தேர்தல் ஆணையத்தின் கவனத்துக்கு கொண்டு சென்றிருக்கிறோம். கிராமப் பகுதிகளில் பணம் கொண்டு செல்லும் போது ஆவணங்களைக் காண்பிக்க முடியவில்லை என்பது போன்ற சிரமங்கள் இருக்கின்றன. சட்டத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ, அதன்படிதான் பணியாற்ற வேண்டி இருக்கிறது. மருத்துவம் போன்ற அவசர தேவைகளுக்குப் பணத்தைக் கொண்டு செல்லும் போது உரிய ஆவணத்தை வாட்ஸ் அப்பில் காட்டினாலும் ஏற்றுக் கொள்ளுமாறு தேர்தல் நிலை கண்காணிப்புக் குழுக்களுக்கு அறிவுறுத்தி இருக்கிறோம்" என்றார்.

Follow our WhatsApp Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper WhatsApp channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel

# தீய சக்தி தி.மு.க. மண்ணைக் கவ்வப் போவது உறுதி உறுதி உறுதி- விஜய்



சென்னை, மார்ச் 27:
தி.மு.க. தலைமையின் அரவணைப்பிலும் ஆதரவிலும் செயல்படும் இத்தகைய ஆதாய சூதாடிகளுக்குத் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பாக வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோன்ற நபர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காத தி.மு.க. அரசையும் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

த.வெ.க.வைச் சீண்டுவதாக நினைத்து, ஒட்டுமொத்தப் பெண்களையும் அவமதிக்கும் இச்செயலால், வருகின்ற தேர்தலில் தாய்க்குலத்தின் ஏகோபித்த முடிவால் தீய சக்தி தி.மு.க. மண்ணைக் கவ்வப் போவது உறுதி உறுதி உறுதி என்று கூறியுள்ளார்.

# சஸ்பெண்ட் நடவடிக்கையை தொடர்ந்து TVK-வில் இணையும் காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுச்செயலாளர்



சென்னை, மார்ச் 27:
தமிழக காங்கிரஸ் கட்சியில் சிலர் தி.மு.க.வுடன் கூட்டணி அமைக்க எதிர்ப்பு தெரிவித்து ஏற்கனவே கருத்து தெரிவித்து வந்தனர். இந்த நிலையில், தி.மு.க.வுடன் கூட்டணி உறுதியாகி 28 தொகுதிகள் ஒதுக்கப்பட்டது.

இதனிடையே, காங்கிரஸ் நிர்வாகிகள் சிலர் தன்னை சந்தித்ததாக த.வெ.க. தேர்தல் மேலாண்மை பொதுச்செயலாளர் ஆதர் அர்ஜுனா பேசியிருந்தார்.

இதனை தொடர்ந்து, கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்டதாக கூறி காங்கி ரஸ் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் டி.செல்வத்தை அப்பதவியில் இருந்து நேற்று சஸ்பெண்ட் செய்து கட்சியின் மாநில தலைவர் செல்வப்பெருந்தகைஉத்தரவிட்டு இருந்தார்.

இந்த நிலையில், காங்கிரஸ் கட்சியில் இருந்து சஸ்பெண்ட் செய்யப்பட்ட டி.செல்வம் விஜய் முன்னிலையில் இன்று தமிழக வெற்றிக்கழகத்தில் இணைய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

நேற்று பிற்பகல் 3 மணிக்கு பனையூரில் உள்ள த.வெ.க.வின் அலுவலகத்தில் இணைப்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது. இந்த நிகழ்ச்சியில் காங்கிரசில் இருந்து நீக்கப்பட்ட டி.செல்வம் த.வெ.க.வில் இணைய உள்ளார்.

# TVK மகளிர் தின விழாவில் விஜய் பாடலுக்கு நடனமாடிய அரசு பள்ளி தலைமை ஆசிரியை சஸ்பெண்ட்!



தஞ்சை, மார்ச் 27:
தமிழக வெற்றிக் கழகம் சார்பில் மகளிர் தின பெரும்பாலான மாவட்டங்களில் நடைபெற்றது. மாமல்லபுரத்தில் நடைபெற்ற கொண்டாட்ட விழா விஜய் கலந்துகொண்டார்.

இந்நிலையில், தஞ்சை மாவட்டம் ஒரத்தநாட்டில் தவெக மகளிர் தின விழாவில் விஜய் பாடலுக்கு நடனமாடிய அரசு பள்ளி தலைமை ஆசிரியை கிருஷ்ணவேணி நடனமாடிய வீடியோ இணையத்தில் வைரலாகி சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்நிலையில், அரசு பள்ளி தலைமை ஆசிரியை கிருஷ்ணவேணியை பணியிடை நீக்கம் செய்து பள்ளிக்கல்வி துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

# ‘அம்மா’ வளர்த்த சேகர்பாபு இப்போது ‘அப்பா’வின் அடிமை: தமிழிசை விமர்சனம்



சென்னை, மார்ச் 27:
“அம்மா (ஜெயலலிதா) வளர்த்த சேகர்பாபு அப்பாவிடம் (ஸ்டாலின்) சென்று அடிமையானார்” என பாஜக மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறும்போது, “அமைச்சர் சேகர்பாபுவுக்கு எங்களைப் பற்றி பேச எந்த தார்மிக உரிமையும் கிடையாது. நான் அப்பா வளர்த்த பிள்ளை, எனக்கு மோடியை பிடிக்கும் என்பதால் தேசியத்தில் தஞ்சமடைந்தேன். அம்மா வளர்த்த சேகர்பாபு ‘அப்பா’விடம் சென்று அடிமையானார். அதனால் அவர் என் தந்தை பற்றியெல்லாம் பேசக்கூடாது. நான் எனது அப்பாவின் கட்சியில் இல்லை, வாரிசு அரசியலை எந்த விதத்திலும் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

நான் பாஜகவில் இணைந்து 27 ஆண்டுகள் ஆகிவிட்டன. அடிப்படை உறுப்பினரில் ஆரம்பித்து மண்டல், மாவட்டம், மாநிலம் மற்றும் தேசியம் என வளர்ந்துள்ளேன்.

எடப்பாடி பழனிசாமி டெல்லிக்கு சென்றால் முதல்வருக்கு பயம் வந்துவிடுகிறது. உங்கள் அமைச்சர்கள் சிலர் போட்டி போடாத முடியாத நிலை இருக்கிறது.

எங்களை (பாஜக) காட்டி திமுக, கூட்டணி கட்சிகளுக்கு ஒரு சீட்டை குறைக்கிறார்கள். எனவே ஸ்டாலினுக்கு நாங்கள் உதவி செய்து கொண்டிருக்கிறோம். விசிக, கம்யூனிஸ்டுகள் அடிமையாக இருக்கிறார்கள். பாஜக உள்ளே வந்துவிடும் என சொல்கிறார்கள். நீங்கள் கவலைப்பட வேண்டாம். நாங்கள் உள்ளே வந்துவிட்டோம்” என்று அவர் கூறினார்.

# பிளஸ்-2 தேர்வு முடிந்ததால் மாணவர்கள் மகிழ்ச்சி.. விடைத்தாள் திருத்தும் பணி ஏப். 9-ந்தேதி தொடக்கம்



சென்னை, மார்ச் 27:
தமிழ்நாட்டில் பிளஸ் 2 தேர்வு கடந்த 2-ந்தேதி தொடங்கி நடைபெற்று வந்தது. 8 லட்சம் மாணவ-மாணவிகள் இந்த தேர்வினை எழுதி வந்தார்கள்.

அறிவியல் பாடப்பிரிவு மாணவர்களுக்கான பொதுத்தேர்வு கடந்த திங்கட்கிழமை நிறைவடைந்தது. பிற பாடப்பிரிவு மாணவர்களுக்கான கணினி அறிவியல், கணினி பயன்பாடுகள், உயிரி வேதியியல், தொடர்பு ஆங்கிலம், இந்திய கலாசாரம், அரசியல் அறிவியல் உள்ளிட்ட தேர்வுகள் இன்று நடந்தன. இத்துடன் பிளஸ் 2 அனைத்து மாணவர்களுக்கும் இன்று முடிந்தது.

இந்த ஆண்டு மொழி பாடங்களுக்கு பிறகு இயற்பியல், வேதியியல், கணிதம் ஆகிய பாடங்கள் சற்று கடினமாக இருந்ததாக மாணவர்கள் தெரிவித்தனர். இதனால் இந்த பாடங்களில் செண்டம் பெறும் மாணவர்கள் எண்ணிக்கை குறைய வாய்ப்பு உள்ளது.

மேலும் மருத்துவம், பொறியியல் படிப்புகளுக்கான கட் ஆப் மதிப்பெண்ணும் கணிசமாக குறையும் என்று ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் பிளஸ்-2 பொதுத்தேர்வு இன்று முடிந்ததால் மாணவ-மாணவிகள் உற்சாகத்தில் ஆட்டம் போட்டனர். பகல் 1.15 மணிக்கு தேர்வு முடிந்து வெளியே வந்த மாணவர்கள் மகிழ்ச்சியில் ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்து வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டனர்.

பள்ளி படிப்பை முடித்து உயர்கல்விக்கு செல்கின்றோம் என்ற நிலையில் தாங்கள் படித்த பள்ளியை நினைவுகூர்ந்தனர். மாணவ-மாணவிகள் நண்பர்களுடன் தேர்வு முடிந்த மகிழ்ச்சியில் துள்ளி குதித்தனர். தேர்வு மையங்களை விட்டு வெளியே வந்த அவர்கள் ஆரவாரம் செய்தனர்.

பிளஸ்-2 தேர்வு முடிந்ததும் விடைத்தாள்கள் மையங்களுக்கு பாதுகாப்பாக கொண்டு செல்லப்பட்டன. விடைத்தாள் திருத்தும் பணி ஏப்ரல் 9-ந் தேதி தொடங்கி 20-ந் தேதி வரை நடைபெற உள்ளது. 45 ஆயிரத்திற்கும் மேற்பட்ட முதுநிலை ஆசிரியர்கள் இந்த பணியில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். மே 8-ந்தேதி தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# “ஒரு சொட்டு தண்ணீர் தராத காங்கிரஸுக்கு 28 எம்எல்ஏ சீட்டு, ஒரு ராஜ்யசபா சீட்டு!” - சீமான் விமர்சனம்




மேட்டூர், மார்ச் 27:
“ஒரு சொட்டு தண்ணீர் தராத காங்கிரஸ் கட்சிக்கு 28 எம்எல்ஏ சீட்டு, ஒரு ராஜ்யசபா சீட்டு கொடுத்து கூடவே வைத்திருக்கிறர்கள்,” என நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் திமுகவை விமர்சித்துள்ளார்.

சேலம் மாவட்டம் மேட்டூர் சட்டப்பேரவை தொகுதிக்குட்பட்ட மேச்சேரி பேருந்து நிலையம் முன்பு இன்று நடந்த பிரச்சாரத்தில் நாதகவின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மேட்டூர் வேட்பாளர் வித்யா வீரப்பனை ஆதரித்து பிரச்சாரம் செய்தார்.

அப்போது அவர் பேசியதாவது:

ஒரு சொட்டு தண்ணீர் கொடுக்க முடியாது என்று கர்நாடக முதல்வர் சொல்கிறார். நமது முதல்வர் கர்நாடகா காங்கிரஸ் வெற்றிக்காக பிரச்சாரம் செய்தார். கட்சித் தலைவராக போய்க் கேட்பது தவறில்லை, ஆனால், முதல்வர் என்ற பெயரில் போய்க் கேட்பது எந்த விதத்தில் நியாயம்? ஒரு சொட்டு தண்ணீர் தராத காங்கிரஸ் கட்சிக்கு 28 எம்எல்ஏ சீட்டு, ஒரு ராஜ்யசபா சீட்டு கொடுத்து கூடவே வைத்திருக்கிறர்கள்.

கச்சத்தீவு, காவிரி நீர் உரிமை, முல்லை பெரியாறு உரிமை என அனைத்தையும் இழந்து நிற்கிறோம். காவிரி நடுவர் மன்ற தீர்ப்பு வழக்கை கருணாநிதி திரும்பப் பெற்றார். இதனால் 500 டிஎம்சி பெற வேண்டிய நாம் 150 டி.எம்சி.க்காக கையேந்தி நிற்கிறோம்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தண்ணீர் தேவையில் தன்னிறைவு திட்டம் கொண்டுவந்து கடலில் கலக்கிறதை தடுத்து நிறுத்தி ஏரிகள், குளங்களை நிரம்பி அடுத்தவரிடத்தில் கையேந்தி நிற்கிற நிலைமையை மாற்றுவோம்.

ஒரு விழுக்காடு, அரை விழுக்காடு வைத்திருக்கிறவர்கள் கூட்டணிக்காக பேரம் பேசி செல்கிற நேரத்தில் தனித்தன்மையாக மக்களை சந்தித்து 8.5 விழுக்காடு வாக்கு வைத்திருக்கிறோம். திமுக அதிமுக தனியாக இதுதான் எங்கள் வாக்குகள் என்று சொல்ல முடியாது. எவ்வளவோ பதவி ஆசை காட்டியபோதும், நாங்கள் பதவி, பணத்திற்காக வந்தவர்கள் அல்ல மக்களின் உதவிக்காகவும், தமிழ் இனத்திற்காகவும் வந்தவர்கள். மாற்றம் என்பது சொல் அல்ல அது செயல்.

# பாஜகவுக்கு ஊட்டி தொகுதி ஒதுக்கப்பட்டதற்கு எதிர்ப்பு - அதிமுக தொண்டர்கள் ஆர்ப்பாட்டம்




ஊட்டி, மார்ச் 27:
என்டிஏ கூட்டணியில் ஊட்டி சட்டப்பேரவைத் தொகுதி பாஜகவிற்கு ஒதுக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து,ஊட்டியில் உள்ள அதிமுக அலுவலகம் முன்பு தொண்டர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி, குன்னூர் மற்றும் கூடலூர் சட்டப்பேரவைத் தொகுதிகள் உள்ளன. இதில், ஊட்டி சட்டப்பேரவைத் தொகுதியில் கடந்த முறை அதிமுக கூட்டணியில் பாஜக போட்டியிட்டது. குன்னூர் மற்றும் கூடலூர் சட்டப்பேரவைத் தொகுதியில் அதிமுக போட்டியிட்டது.

தேர்தல் முடிவுகளில், கூடலூரில் மட்டும் அதிமுக வேட்பாளர் பொன். ஜெயசீலன் வெற்றி பெற்றார். ஊட்டியில் பாஜக வேட்பாளரும், குன்னூரில் அதிமுக வேட்பாளரும் தோல்வியடைந்தனர்.

இந்நிலையில், இம்முறை ஊட்டி சட்டப்பேரவைத் தொகுதி அதிமுகவிற்கு ஒதுக்கப்படுமென தொண்டர்களும், நிர்வாகிகளும் எதிர்பார்ப்புடன் காத்திருந்தனர். ஊட்டி தொகுதி அதிமுகவிற்கு ஒதுக்கப்பட்டு, அக்கட்சியின் மாவட்ட செயலாளர் கப்பச்சி டி.வினோத் போட்டியிடுவார் என்ற நம்பிக்கையோடு தேர்தல் பணிகளையும் அதிமுகவினர் தொடங்கினர்.

இந்நிலையில், ஊட்டி தொகுதி பாஜகவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக நேற்று அறிவிப்பு வெளியானதால், நீலகிரி மாவட்ட அதிமுக தொண்டர்கள் ஏமாற்றம் அடைந்தனர். ஊட்டியில் உள்ள கட்சி அலுவலகத்தில் திரண்ட அதிமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

இதனிடையே ஊட்டி தொகுதி பாஜகவுக்கு ஒதுக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து, கட்சி அலுவலகம் முன்பு அதிமுகவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டனர். இதில் ஜெ பேரவை தலைவர் கெரடா ராஜு, கடநாடு குமார், பெள்ளி, தாம்பட்டி சிவகுமார் உள்ளிட்ட நிர்வாகிகள் தொண்டர்கள் பங்கேற்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஊட்டி தொகுதியை அதிமுகவுக்கு ஒதுக்க வேண்டும் என கோஷங்கள் எழுப்பப்பட்டன. அதே நேரத்தில், நீலகிரி மாவட்டத்தில் உள்ள மற்ற 2 தொகுதிகளான, குன்னூர் மற்றும் கூடலூர் தொகுதிகளில் அதிமுக போட்டியிடவுள்ளது.

இதில், கூடலூர் தொகுதியில் ஏற்கனவே எம்எல்ஏ.,வாக உள்ள பொன்.ஜெயசீலனுக்கு மீண்டும் வாய்ப்பு அளிக்கப்படலாம். குன்னூர் சட்டப்பேரவைத் தொகுதியில் ஏற்கனவே போட்டியிட்ட கட்சியின் மாவட்ட செயலாளர் கப்பச்சி வினோத்திற்கு வாய்ப்பு கிடைக்கலாம் என அதிமுகவினர் தெரிவித்தனர்.

அதிமுக கூட்டணியில் இடம் பெற்றுள்ள தமாகா தாமரை சின்னத்தில் போட்டியிடும் என்ற ஜி.கே.வாசனின் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து, அக்கட்சியின் நீலகிரி மாவட்ட நிர்வாகிகள் அரசு கொறடா கா.ராமச்சந்திரன் மற்றும் மாவட்ட திமுக பொறுப்பாளர் கே.எம்.ராஜு முன்னிலையில் திமுகவில் நேற்று இணைந்தனர்.

# புதுச்சேரியில் 3 தொகுதிகளில் விசிக தனித்துப் போட்டி

## காங்கிரஸ் மீது திருமாவளவன் கடும் குற்றச்சாட்டு



புதுச்சேரி,மார்ச் 27:
புதுச்சேரியில் 3 தொகுதிகளில் விசிக தனித்துப் போட்டியிடுவதாக அறிவித்துள்ளது. இதனால், அங்கு இண்டியா கூட்டணியில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இதற்கு, காங்கிரஸ் தான் காரணமென்று அக்கட்சியின் மீது விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன் கடுமையாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

புதுச்சேரியில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணியில் திமுகவுக்கு 14 தொகுதிகள் ஒதுக்கப்பட்டது. இவற்றில் உழவர்கரை தொகுதியை விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு திமுக ஒதுக்கியது.

ஆனால், அந்தத் தொகுதியில் ஓரிரு வாரங்களுக்கு முன்பு வரை பாஜக ஆதரவு சுயேட்சை எம்எல்ஏவாக இருந்து விலகி இப்போது தனது கட்சியில் ஐக்கியமாகினவரை வேட்பாளராக காங்கிரஸ் நிறுத்தியுள்ளது. விசிகவுக்கு உழவர்கரை தொகுதியை ஒதுக்கியும் கூட காங்கிரஸ் வேட்புமனுவை வாபஸ் பெறவில்லை.

இதற்கு விசிக தலைவர் திருமாவளவன் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

மேலும் இது குறித்து, நேற்று (வியாழக்கிழமை) திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,“விசிகவுக்கென உழவர்கரை ஒதுக்கப்பட்ட பிறகும்கூட, தான் நிறுத்திய வேட்பாளரை வாபஸ் பெற வைக்க புதுச்சேரி காங்கிரஸ் மறுக்கிறது. இதனால் காங்கிரஸ் கூட்டணியில் விசிகவுக்கு தொகுதி உண்டா இல்லையா என்பது தெளிவாகாத நிலையே ஏற்பட்டிருக்கிறது.

வேட்பு மனுக்களைத் திரும்பப்பெறுவதற்கான காலக்கெடு இன்று பிற்பகல் 3.00 மணியோடு முடிவடைய உள்ளது. இந்நிலையில் காங்கிரஸின் அணுகுமுறை விசிகவுக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்தமாகக் கூட்டணியின் வெற்றி வாய்ப்பையே கேள்விக்குள்ளாக்குவதாக இருக்கிறது.

எனவே, வேறு வழியின்றி விசிக வேட்புமனு தாக்கல் செய்துள்ள 3 தொகுதிகளுக்குமான வேட்பாளர்களை அதிகாரபூர்வமாக அறிவிக்கிறோம்” என்று தெரிவித்துள்ளார்.

அதன்படி, ஊசுடு தொகுதிக்கு அரியபுத்ரி என்கிற அரிமாத்தமிழன், நெட்டப்பாக்கம் தொகுதிக்கு அமுதவன், உழவர்கரை தொகுதிக்கு செல்வ புஷ்பலதா ஆகியோர் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

# ஆந்திராவில் பேருந்து லாரி மோதி விபத்து 13 பேர் பலி, 25 பேர் காயம்



மார்க்கபுரம், மார்ச் 27:
ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் மார்க்கபுரம் மாவட்டத்தின் ராயவரம் பகுதியில், இன்று (மார்ச் 26) அதிகாலையில் பேருந்து மீது லாரி மோதிய விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர், 25 பேர் காயமடைந்தனர்.

இந்த விபத்து குறித்துப் பேசிய மார்க்கபுரம் மாவட்டப் பொறுப்பு ஆட்சியர் பி. ராஜா பாபு, “பேருந்தில் பயணித்த 41 பயணிகளில், 13 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்; அவர்களது உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. காயமடைந்து மார்க்கபுரத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள 25 பேரில், 10 பேர் பலத்த காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும், இதில் 5 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

கவலைக்கிடமான நிலையில் உள்ள அந்த 5 பேரும் குண்டூர் அரசுப் பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்” என்று தெரிவித்தார்.

காவல்துறை அதிகாரிகளின் தகவலின்படி, காலை 5:30 மணி முதல் 6:00 மணிக்குள், ஒரு வளைவுப் பாதையில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

அப்போது, கனி கிரியிலிருந்து சரளைக் கற்களை ஏற்றிக்கொண்டு வந்த ஒரு டிப்பர் லாரி மீது, தனியார் சுற்றுலாப் பேருந்து மீது நேருக்கு நேர் மோதியது. விபத்துக்குள்ளான அந்தப் பேருந்து ஹரிகிருஷ்ணா டிராவல்ஸ் நிறுவனத்திற்குச் சொந்தமானது. இந்தப் பேருந்து தெலங்கானாவின் நிர்மல் பகுதியிலிருந்து ஆந்திராவின் நெல்லூர் மாவட்டத்தில் உள்ள விஞ்சமூருக்குப் பயணித்துக் கொண்டிருந்தது.

விபத்து குறித்து குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு வெளியிட்ட இரங்கல் செய்தியில், “ஆந்திர பிரதேச பஸ் விபத்து பற்றி அறிந்து ஆழ்ந்த கவலையடைந்தேன். பாதிக்கப்பட்டோரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைந்து திரும்ப வேண்டி கொள்கிறேன்.” என்று தெரிவித்துள்ளார்.

அதேபோல், நிவாரண உதவிகளை அறிவித்த பிரதமர் மோடி, விபத்தில் உயிரிழந்த ஒவ்வொருவரின் குடும்பத்துக்கும் தலா ரூ.2 லட்சம் நிவாரணத் தொகையாக வழங்கப்படும் என்றும், காயமடைந்தவர்களுக்கு ரூ.50,000 வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இந்த விபத்து குறித்து தகவல்களை அறிய மார்க்கபுரம் மற்றும் நெல்லூர் மாவட்ட நிர்வாகங்கள் சார்பில் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

அவற்றின் தொடர்பு எண்கள்: 6304285613, 9985733999, 7989537285, 9703578434 (மார்க்கபுரம்); 7995575699 மற்றும் 08612331261 (நெல்லூர்).

# செக்யூரிட்டி கார்டுகள் தேவை

கோடம்பாக்கம் சேத்துப்பட்டு புரசைவாக்கம் கோட்டூர்புரம் பகுதிகளில் வேலை செய்ய செக்யூரிட்டி கார்டுகள் தேவை

அணுகவும்: 9840861539

# ADVERTISE WITH US

CONTACT US 9438610756

# WANTED: FEMALE ANCHORS

- Age 18 to 35
- Good Looking
- Work from Home (Full-time/Part-time)

Salary: Rs. 20,000 to 50,000

Call / Whatsapp: 7789941009, 9337501889



# சிவா விஷ்ணு திருமண தகவல் மையம்

அனைத்து இனத்தவர்களுக்கும்
முதல் மணம் • மறுமணம்
பொருத்தமான ஜாதகங்கள் அனுப்பப்படும்

மணமகன் • மணமகள் தேவைப்படும் அனைவருக்கும் நம்பகமான மற்றும் விரைவான சேவை

- ✓ அனைத்து இனத்தவர்களுக்கும் பதிவு
- ✓ ஜாதக பொருத்தம் பார்த்து அனுப்பப்படும்
- ✓ முதல் திருமணம் & மறுமணம் வசதி
- ✓ உடனடி தொடர்பு & சிறந்த பொருத்தம்

தொடர்புக்கு: 9150989424

# Special Invitation

to retired seniors house wives businessmen bankers CAs NRIs age.30 to 70.qualification SSLC/graduate

To restart your second Innings with a career business opportunity

- Flexible timing unlimited incentive
- No target work from home training provided For successful business.

Contact Mr. Irudaya Raj Ph.9486634780

# Vilambaram

We provide Targeted Leads to grow your buisness

Boost your business

Call:: 91 7789941009, 9337501889 www.vilambaram.com



# keerthi foundation

De Addiction Cum Rehabilitation Centre

INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers

Internship:
- Clinical Training
- Counseling Practice
- Case Work

Jobs:
- Social Worker
- Jr Psychologist
- Rehab Counselor

Build Your Career in De-Addiction & Mental Health Care


Call: 9841945060 | 7845027710

www.keerthifoundation.com

# ADIYOGI

REAL ESTATE WHOLESALE

VADACHENNAI CALL DRIVER



ஆதியோகி ரியல் எஸ்டேட்

CMDA DTCP அப்ரூவல் வீட்டுமனைகள் விற்பனை

_CONTACT_

8939228901

# WANTED

JAY SECURITY FORCE

பணி வாய்ப்புகள்

- பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
- இடங்கள்:
  - பெருங்குடி, துரைப் பாக்கம்
  - காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  - விருகம்பாக்கம்

பெண்கள் தேவை

சம்பளம்:- 12500 முதல் 20000 வரை

9791061354 - 8072969599

Head office
NO :1, அம்பாள் அவின்யூ,
வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம்,
மேட்டுக்குப்பம்- சென்னை-97

# PREMIUM LAND SALE NEAR PARANDUR AIRPORT

YOU ARE LUCKY! Grab Your Future Investment Today!

Location: Just 6 KM Near Parandur New Airport



Price Details
₹700 to ₹2200 per Sq.Ft
Affordable & High Return Investment

Why Invest Here?
- Fast Developing Area
- Near Upcoming Airport
- Excellent Appreciation Value
- Suitable for Residential & Investment
- Easy Road Access

PLOTS AVAILABLE NOW!
Contact: CT. Guruji
Phone: 90031 32847
LIMITED PLOTS – BOOK NOW!

# WANTED

Site Supervisor required for construction work in Ambattur

Contact: 8428872887

# WANTED

Needed female staff to look after children, patients.

Contact 9150989424

# SEVEN STARS LOGISTICS PVT.LTD.

we simplify shipping for your business

Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.



# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com

# just499® MLM SOFTWARE

All Types of MLM Software Solutions Available

Binary, Unilevel, Matrix, Board, Generation, ROI / Investment

ONLY Rs. 499

Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

# Sri Manjal Mart



தரமான ஆன்மீக பூஜை பொருட்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க

20% OFF

www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

# SADHANA DEVI.K SUPREME CAR WASH

Car Wash & Detailing



- Car Foam Pressure Wash
- Teflon Coating
- Ceramic Wax Treatment
- Under Chassis Painting
- Interior Foam Wash / Stain Remover
- Paint Correction / Protection

We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com

No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.

# WANTED

M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift

7540003588

# அருள்தரும் தெய்வம்



என்றும் நம் இல்லங்களில்

www.arultharumdeivam.com

அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..


# WANTED

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact 8248951872

# கவிதை அரங்கம்!





உன்னை
மட்டும் அல்ல
உன் நினைவை
சுமப்பதும்
வரமே எனக்கு

ஒளியிழந்த
விழிகளுக்கும்
கனவை தந்தாய்
கலைந்துவிடாதே
இருண்டுவிடும்

என்னுலகம்

அன்பெனும் குழலை
வாசித்து பார்க்க
ஆசை அவன்
விழிகளில்

மௌனமாயிருந்தே
மனதை
கொள்ளையடித்தாய்

## வாழ்க்கை தத்துவம்...



பக்குவம் என்பது யாதெனில்
புரிந்து கொள்வதோ
புரிய வைப்பதோ இல்லை
வாயை மூடிக்கொண்டு
தன்னுடைய வேலையை பார்ப்பதே

யாரிடமிருந்தும் எதையும்
எதிர்பார்க்காத அது
உன்னுடைய மகிழ்ச்சியை
அழித்துவிடும்

கடலில் கல் எறிவதால்
கடலுக்கு வலிப்பது இல்லை
கல் தான் காணாமல் போகும்
அதே போல விமர்சனங்கள்
கல்லாக இருக்கட்டும்
நீங்கள் கடலாக இருங்கள்

# தாய் கிழவி......

"ஏன்டி....அன்னம்... உன் அம்மா வரலையா... எதுக்குய்யா....." "இவ்வளவு அக்கறை யா.... கேட்குறே...?" "வீட்ல இருக்கிறத பை பைய்யா கொடுத்தனுப்புவியே " "உனக்கு கட்டி வச்ச நாளிலிருந்து இது நாள் வரைக்கும் பை பைய்யா வந்து கொட்டிட்டு போறாங்க அவங்கலப் போயி உன் நாக்கு அழுகிப் போயிரும்" "ஏய்... சும்மா நிறுத்துடி என்னமோ மகாராணிய கட்டி வச்சு நாளு தவறாம கஜானாவில் இருந்து பை பைய்யா கொட்டுறாங்க போடி போடி வெறும் பய மவளே உன்ன பழுக்க கம்பிய காயவச்சு வாயிலேயே எதுத்து பேசாதன்னு இழுக்கனும்" "கட்டின பொண்டாட்டிக்கு, பெத்த பிள்ளைக்கும்,ஒரு வேல கஞ்சி தண்ணீ ஊத்த வக்கு இல்லே பேச்சுப்பாரு குடிக்கிற வாயை கம்பி காயவச்சு உன்னைத்தாய இழுக்கனும்" "நான் தண்ணீ அடிச்சுட்டு வந்து வச்சுக்கிறேன்டி சரி சரி காச எடு" என்னது காசா... அய்யா கட்டுக்கட்டா சம்பாதிச்சு கொடுத்திருக்கிலே அதனாலே கேப்பே கேனப்பய மவனே குழவிக்கல்ல போட்டு கொன்னேப் புடுவே "என்று அன்னம் கத்திய கத்தலைக்கேட்டு வெளியேறினான் அன்பரசு

"என்ன மாப்ளே.. என்னய்யா.. சோகமா வர்றே " "வயிறு கப கபன்னு எரியுது காலையில இருந்து எதுவும் சாப்பிடல மாப்ளே...." "என்னாமாப்ளே.. நானிருக்கும் போது கவல படலாமா...வா மாப்ளே ஆத்துப்பக்கம் போவோம்" "யே,மாப்ளே... இன்னைக்கு கடை திறக்கலையா..." "இன்னைக்கு காந்தி ஜெயந்தி யாம் மாப்ளே... அவரு யாரு காந்தி ஜெயந்தி," "சுதந்திரம் வாங்கித் தந்தாராம் " "நம்ம குடிச்சு சுதந்திரமா இருக்குறதுக்கா... அதுக்கு கடைய ஏன் தொறக்கக்கூடாது இன்னிக்குத்தான் நிறையா குடிக்கனும் என்ன அன்பு மாப்ளே.." ஆத்துப்பக்கம் போவோம் நிறைய குடிப்போம் "

என இருவரும் பேசிக்கொண்டே ஆத்துப்பக்கமா....வந்தவர்கள் ஆத்தில் இறங்கினார்கள்.

அப்போது தலையில் கிழிந்த சேலையை கட்டிக் கொண்டு குப்பைகள் நிறைந்திருந்ததை ஒரு சிறிய குச்சியை வைத்து பிளாஷ்டிக் டப்பா, தண்ணீ பாட்டில்,தேங்காய் கொட்டாச்சி, அட்டை,மது பாட்டில்கள், இரும்பு பொருட்கள்,என வித வித பிரித்து பிளாஸ்டிக் சாக்கு பையில் போட்டுக் கொண்டு இருந்த சத்தம் கேட்டு திரும்பி பார்த்தான் அப்போது சாக்கு பையை தூக்கி நிறுத்தும் போது பார்த்தவன் அப்படியே உறைந்து போய் நின்றான் அன்பரசு சிறிது தூரம் சென்றவன் அன்பரசு அருகில் இல்லாததைப் பார்த்து திரும்பி வந்தவன் "என்ன மாப்ளே அந்த கிழவிய பார்க்குறே அது தினமும் வந்து குப்பையை கிளறி பொறுக்கும் நீ வா மாப்ளே போவோம் " "நா வரல நீ போயிட்டு வா" எனச் சொல்லிக் கொண்டே வந்த வழியை பார்த்து திரும்பினான் அன்பரசு. மாலை நேரத்தில் வீட்டிற்கு வந்தான் "அன்னம் அன்னம் " என்னம்மா...பன்றே.." என அழைக்கும் கணவன் குரல் கேட்டு வீட்டினுள் இருந்து வந்த அன்னம் கணவன் அன்பரசைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தாள். கையில பையில் வாங்கி வந்த பொருட்களைப் பார்த்து "என்னங்க நீங்க.... நீங்க....தானா" என கண்கள் கலங்கியபடி கேட்டாள் "எங்கே பிள்ளைகள்" எனக் கேட்டான் அன்பரசு "அம்மா வந்தாங்க பிள்ளைகளுக்கு திண்பண்டம் கொடுத்துட்டு உள்ளே இருக்காங்க" எனச் சொல்லிக் கொண்டே வீட்டினுள் வந்தான் அன்பரசு

"எனக்கு போதும் தாய் கிழவி " என பேரப் பிள்ளைகளுக்கு வாங்கி வந்த திண்பண்டங்களை கொடுத்துக் கொண்டு இருந்ததைப் பார்த்தவன் "அத்தே...என்னை மன்னிச்சுருங்கன்னு" காலில் விழுந்தான் "தம்பி என்னப்பா இதெல்லாம் எழுந்திரிப்பா.... சின்னப்பிள்ளையாட்டம்"என தாய் கிழவி சொல்ல, "நீங்க மன்னிச்சுட்டேன்னு சொல்லுங்க" என்றான் "அன்னம் உன் புருசன பாருடி எழுந்திருக்கச் சொல்லுடி" என்று சொல்ல "அம்மா....உன்னை எப்படி எல்லாம் பேசி அசிங்கப் படுத்தி இருப்பாரு அதுக்கு கண்ணீர் வடித்து உன் கால கழுவட்டும் " என அன்னம் சொல்ல, "ஆம்பலப்புள்ளே பொம்பளைங்க கால்ல விழக்கூடாதுடி" ன்னு அம்மா சொல்லவும், "அவரு ஏ கால்லையா விழுந்தாரு உன் கால்ல தானே! நீ,பெரிய மனுசி தானே உன்கால்ல விழுந்தா தப்பில்லே" என்னங்க என்ன தண்ணீ இன்னைக்கு அதிகமாயிடுச்சா... எழுந்திருங்க" என்றாள் அன்னம் அத்தே...! மாமா இறந்தப்போ உங்களுக்கு துணையா இருந்து நான் தான் பிள்ளையா இருந்து பாக்கனும், குடிக்கு அடிமையா இருந்துட்டேன் அப்பக்கூட,,என்னைய கண்டிக்கல, மகள் கட்டிக் கொடுத்து உங்க மகள் பசி இல்லாம வாழனும்னு,பேரப் பிள்ளைகளும் நல்லாஇருக்கனும்னு என்னைக் கூட எதிர்பார்க்காம தினம் தினம் பேப்பர் பொறுக்கி காப்பாத்தி இருக்கீங்க ஆம்பளையா பொறந்து உதவாக்கரையா இருந்திருக்கேனே... இனிமே நீங்க எங்கேயும் போகக் கூடாது,இங்கேயே இருக்கனும் இனிமே நான் வேலைக்கு போயி,சாம்பாதிக்கிறேன்னு அழுது கொண்டே சொன்னான் அன்பரசு "அம்மா...வேலக்கு போயிட்டு காசு கொண்டு வர்றேன்டி ன்னு சொல்லி எனக்காக என்ன காரியம் மா செய்திருக்கே" "மானத்தோடு வாழனும் திருடக்கூடாது என்ன மாதிரி கிழவிகளுக்கு எவன்டி வேல கொடுப்பே" "அம்மா...நா உழைச்சு உன்ன காப்பத்தனும் என்கிட்டே கூட சொல்லாம மறைச்சுட்டியே? இனிமை நீ!எங்கேயும் போகக்கூடாது" எனச் சொல்லி அம்மாவை கட்டி அணைத்துக் கொண்டாள் அன்னம்.

நல.ஞானபண்டிதன்

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!





12. தண்ணீயே இல்லாத கடல் எங்கே இருக்கு..?

விடை: வேறெங்க MAP -ல தான் இருக்கும்.

13. டன் கணக்கில் துணி துவைக்கும் இடம் எது.?

விடை: Washing(Ton) தான்.

# தினம் ஒரு சமையல்




## பிரோக்காலி ஃப்ரை

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| ப்ரோக்கோலி | -150 கிராம் |
| பெரிய வெங்காயம் | -ஒன்று |
| எண்ணெய் | -2 டேபிள் ஸ்பூன் |
| சீரகம் | -ஒரு டீஸ்பூன் |
| கறிவேப்பிலை | -ஒரு கொத்து |
| பூண்டு | -6 பல் |
| வரமிளகாய் | -2 |
| மஞ்சள்தூள் | -கால் டீஸ்பூன் |
| மிளகாய் தூள் | -கால் டீஸ்பூன் |
| தனியா தூள் | -கால் டீஸ்பூன் |
| கரம் மசாலா | -கால் டீஸ்பூன் |
| உப்பு | -அரை டீஸ்பூன் |
| குருமிளகு பவுடர் | -கால் டீஸ்பூன் |

செய்முறை:



ஒரு பாத்திரத்தில் எண்ணெய் விட்டு சூடானதும் சீரகம் சேர்த்து வெங்காயம் கருவேப்பிலை பூண்டு வரமிளகாய் சேர்த்து தாளித்துக் கொள்ளவும்

ஒரு பாத்திரத்தில் தண்ணீர் வைத்து கொதித்ததும் ப்ரோக்கோலியை சேர்த்து இரண்டு நிமிடம் வேக வைக்கவும்

இப்போது வெந்த ப்ரோக்கோலி தாளிப்புடன் சேர்க்கவும்

இப்போது பெப்பர் பொடி உப்பு மிளகாய்த்தூள் மல்லித்தூள் கரம் மசாலா தூள் சேர்த்துக் கொள்ளவும்

இரண்டு நிமிடம் மசாலாவை நன்றாக வேக வைக்கவும்

பிறகு இறக்கி விடவும் புரோக்கோலி பிரை தயார்

## வெந்தயம் பயன்கள்



. தாய்ப்பால் உற்பத்தியை ஆதரிக்கலாம்

வட ஆப்பிரிக்கா, ஆசியா மற்றும் தெற்கு ஐரோப்பாவில் உள்ள மக்கள், தாய்ப்பால் சுரப்பை அதிகரிப்பதற்காக பாரம்பரியமாக வெந்தயத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

நீங்கள் தாய்ப்பால் கொடுப்பவராக இருந்தால், வெந்தயம் சில பக்க விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் . இது அதிக தாகத்தையும், மேப்பிள் சிரப் போன்ற வியர்வையையும் சிறுநீரையும் உண்டாக்கலாம்.

டெஸ்டோஸ்டிரோன் அளவை அதிகரிக்கக்கூடும்

வெந்தயம் ஆண்களின் பாலியல் ஹார்மோனான டெஸ்டோஸ்டிரோனின் அளவை அதிகரிக்கச் செய்யும் .

வெந்தயச் சத்து மாத்திரைகள் பின்வருவனவற்றையும் மேம்படுத்தக்கூடும்:

கருவுறுதல் மற்றும் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தைக் குறிக்கக்கூடிய விந்தணுக்களின் எண்ணிக்கை.

அறிவியல் கூறுவது: 2017 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஓர் ஆய்வில், 35 முதல் 65 வயதுக்குட்பட்ட 45 ஆண்களுக்கு 12 வாரங்களுக்குப் பிறகு டெஸ்டோஸ்டிரோன் அளவு 46% வரை அதிகரித்திருப்பது கண்டறியப்பட்டது.

இரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்த உதவக்கூடும்

நீரிழிவு நோய் அல்லது நீரிழிவு நோய்க்கு முந்தைய நிலையில் உள்ளவர்களுக்கு, வெறும் வயிற்றில் உள்ள இரத்த சர்க்கரை அளவைக் குறைக்க வெந்தயம் உதவக்கூடும் .


கட்டுப்படுத்தப்படாத உயர் இரத்த சர்க்கரையானது, பின்வரும் சிக்கல்களின் அபாயத்தை அதிகரிக்கக்கூடும்:

கொலஸ்ட்ரால் அளவைக் குறைக்கலாம்

வெந்தயச் சத்து மாத்திரைகள், 'கெட்ட' கொலஸ்ட்ரால் என்று அழைக்கப்படும் குறைந்த அடர்த்தி லிப்போபுரோட்டீன் (LDL) கொலஸ்ட்ராலைக் குறைத்து, 'நல்ல' கொலஸ்ட்ரால் என்று அழைக்கப்படும் அதிக அடர்த்தி லிப்போபுரோட்டீன் (HDL) கொலஸ்ட்ராலை அதிகரிக்கக்கூடும், ஆனால் இதுகுறித்து மேலும் ஆராய்ச்சி தேவைப்படுகிறது.

அதிக கொலஸ்ட்ரால் இருப்பது , அமெரிக்காவில் பெரியவர்கள் இறப்பதற்கு முதன்மைக் காரணமாக விளங்கும் இதய நோய்க்கு ஒரு குறிப்பிடத்தக்க ஆபத்துக் காரணியாகும் .வலியை 67% குறைப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது

# சூரியின் அடுத்த படம்.. சிவகார்த்திகேயன் பட இயக்குனர் உடன் கூட்டணி



நடிகர் சூரி காமெடியனாக இருந்து ஹீரோ ஆனவர். தொடர்ந்து ஹீரோவாக படங்கள் நடித்து குறிப்பிடத்தக்க படங்களை கொடுத்து வருகிறார் அவர்.

தற்போது அவர் ஹீரோவாக நடிக்கும் 7வது படம் பற்றிய அறிவிப்பு வந்திருக்கிறது.

சிவகார்த்திகேயனின் அயலான் பட புகழ் இயக்குனர் ரவிக்குமார் உடன் தான் சூரி கூட்டணி சேர்ந்து இருக்கிறார். அயலான் படம் பெரிய அளவில் வரவேற்ப்பை பெறாத படம் என்பது குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் ரவிக்குமாரின் முந்தைய படமான இன்று நேற்று நாளை படம் ரசிகர்களால் கொண்டாடப்பட்ட ஒன்று.

சூரி – ரவிகுமார் கூட்டணி சேரும் படத்தினை மைத்ரி நிறுவனம் தயாரிக்கிறது. BLOOD FOLLOWED THE FLOOD என போஸ்டரில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அதனால் வெள்ளத்தை மையப்படுத்திய கதை இது என தெரிகிறது.

## சினிமா



மாலத்தீவிற்கு விடுமுறை நாட்களை கொண்டாட சென்றுள்ள நடிகை பிரக்யா ஜெய்ஸ்வால் அங்கு எடுத்துக்கொண்ட தனது சமீபத்திய கிளாமர் போட்டோஷூட் புகைப்படங்களை தற்போது வெளியிட்டுள்ளார். இதோ பாருங்க:

# யூத் படக்குழுவை நேரில் அழைத்து சூர்யா – கார்த்தி செய்த விஷயம்



கென் கருணாஸ் இயக்கி நடித்த யூத் படம் கடந்த மார்ச் 19ம் தேதி திரைக்கு வந்திருந்தது. படத்திற்கு நல்ல விமர்சனங்களும் பாராட்டுகளும் குவிந்து வருகிறது.

தற்போது ரூ.30 கோடியை வசூல் கடந்து இருக்கும் நிலையில் 50 கோடி என்ற மைல்கல்லை யூத் படம் தொடுமா என எதிர்பார்ப்பு இருக்கிறது. இந்நிலையில் நடிகர் சூர்யா மற்றும் அவர் தம்பி கார்த்தி இருவரும் யூத் படத்தை பார்த்து மொத்த படக்குழுவையும் நேரில் அழைத்து பாராட்டி இருக்கின்றனர்.

அந்த புகைப்படங்கள் வைரல் ஆகி இருக்கிறது. அதற்கு யூத் படத்தின் தயாரிப்பாளர் நன்றி கூறி இருக்கிறார்.

# காரடையான் நோன்பு மகிமைகள்



கணவன் ஆயுள் அதிகரிக்க மகத்தான விரதம் - சத்தியவானின் உயிரை சாவித்திரி எப்படி மீட்டார் என்பதுதான் விரதமகிமை.

சத்தியவானின் உயிரை எமனிடமிருந்து மீட்ட சாவித்திரியை நினைத்து பெண்கள் மேற்கொள்ளும் மிகவும் மகத்தான விரதம் தான் காரடையான் நோன்பு. திருமணமான பெண்கள் கணவனின் ஆயுள் அதிகரிக்க வேண்டும் என்றும், திருமணம் ஆகாத இளம் பெண்கள் நல்ல கணவன் அமைய வேண்டும் என சாவித்திரியை நினைத்து விரதமிருக்கின்றனர்.

காரடையான் நோன்பு சத்யவானின் உயிரை எமனிடம் இருந்து மீட்ட சாவித்திரியை நினைத்து அனுஷ்டிக்கப்படும் விரதமாகும் இந்த விரதம் தன் கணவன் தீர்க்காயுளுடன் இருக்க வேண்டும் என்பதற்காக திருமணமான பெண்கள் விரதம் இருப்பது வழக்கம்.
சத்தியவானை மீட்ட சாவித்திரியின் கதை.

மந்திரதேசத்தை ஆட்சி செய்தவர் மன்னர் அசுவபதி. இவரது மகள் சாவித்திரி மிகவும் சிறப்பாக நாட்டை ஆட்சி செய்த அஸ்வபதி தன் மகள் சாவித்திரிக்கு ஏற்ற மணமகனை தானே தேர்ந்தெடுக்கும் வாய்ப்பை வழங்கியிருந்தார். பருவ வயதை அடைந்த சாவித்திரி ஒருமுறை வனப்பகுதிக்குச் சென்றாள் அங்கு சத்தியவானைக் கண்டாள்.

சத்தியவானின் தந்தை சாளுவ தேசத்து மன்னன் துயமத்சேனன். இவர் மிகவும் சிறப்பாக ஆட்சி செய்தார் இருப்பினும் தன் வயது முதிர்வின் காரணமாக கண் பார்வை இழந்தார். அதைப் பயன்படுத்திக் கொண்ட எதிரிகள் அவரிடமிருந்து நாட்டை பறித்துக்கொண்டு சத்தியவான் மற்றும் அவரது பெற்றோரையும் காட்டிற்கு விரட்டிவிட்டனர். சத்தியவானுக்கு இழந்த நாட்டை மீட்க வேண்டும் என்ற ஆசை இருந்தாலும், பெற்றோரை விட்டு செல்ல மனம் இல்லாததால் பெற்றோருக்கு பணிவிடை செய்யும் பொருட்டு காட்டிலேயே வசித்து வந்தார்.

சத்தியவான் குறித்து அறிந்துகொண்ட சாவித்திரி அவளை மணக்க விரும்பினார் அதுகுறித்து தந்தைய அசுவபதியிடம் தெரிவித்தார். அசுபதியும் மகள் சாவித்திரியின் விருப்பத்தை ஏற்றுக் கொண்டு சத்தியவானுக்கு திருமணம் செய்து வைத்தார்.

அரண்மனையில் பல பணிப்பெண்களை தனக்கு உதவியாக வைத்து வாழ்ந்த சாவித்திரி திருமணமான பின், பெண் கணவனுடன் சேர்ந்து வாழ்வது தானே நியாயம் என்பதால் அவள் சத்தியவானுடன் காட்டில் வசிக்க தொடங்கினார். காட்டில் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டாலும் ,சத்தியவானுடன் மிகவும் மகிழ்ச்சியாகவே வாழ்ந்து வந்தாள். கணவனின் ஆயுள் காக்கும் பாக்கியத்திற்காக பல்வேறு விரதங்களைக் கடைப்பிடித்து வந்தார்

இருப்பினும் விதி யாரை விட்டது. ஒரு முறை சத்தியவான், சாவித்திரி இருவரும் காட்டிற்கு விறகுகளை சேகரித்து வர சென்றனர். நண்பகல் நேரம் என்பதால் வேலைக்கு நடுவே மிகவும் களைப்பாக இருப்பதால் சிறிது நேரம் மரத்தினடியில் அமர்ந்து ஓய்வு எடுத்தனர்.

சத்தியவானின் ஜாதகப்படி ஆயுள் குறைவு என்பதால், எமதர்மன் தன் வேலையை செய்ய வந்தார். சாவித்திரியின் மடியில் தலைவைத்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்த சத்தியவானின் உயிரை எமதர்மன் வந்து பறித்து சென்றார். சாவித்திரி தனது கற்பு திறத்தால் எமதர்மன் வருவதை அறிந்து கொண்டாள். சத்தியவானின் உடலை தரையில் கிடத்திவிட்டு எமதர்மனைப் பின் தொடர்ந்தாள்.

இதைக் கண்டு அதிர்ந்த எமன், திரும்பி போய்விடு என சாவித்திரியை எச்சரித்தார். ஆனால் அவர் எதிர்பாராத வகையில் எமனின் காலில் விழுந்தாள் சாவித்திரி. ஒரு பெண் தன் காலில் விழுந்ததும் பெண் என்ற அளவில் அவளுக்கு 'தீர்க்க சுமங்கலி பவ' என வாழ்த்திவிட்டார். எமன் வாழ்த்திய பிறகு தான் புரிந்தது, உயிரைப் பறித்துக் கொண்டு சத்தியவானின் மனைவி என்று.

உடனே சாவித்திரி நீங்கள் வாழ்த்தியது உண்மையானால் அதன் படி வாழ எனக்கு அருள் புரியுங்கள். தான் பதிவிரதை என்பது உண்மையானால் என் கணவனின் உயிரைத் திருப்பித் தாருங்கள் என்றார்.

சாவித்திரியின் புத்திசாலித்தனத்தை வியந்த எமதர்மன் ஒருவனின் இறப்புக்குப் பின் அவனுக்கு மீண்டும் வாழ்வு கிடையாது. அதனால் உனக்கு வேறு ஏதேனும் வரங்களைக் கேள் என்றார்.

சமயோசிதமாக யோசித்த சாவித்திரி, "என் மாமனார், மாமியாருக்கு மீண்டும் கண் பார்வை கிடைக்க வேண்டும். அவர்கள் இழந்த நாட்டை திரும்பப் பெற வேண்டும். என் தந்தைக்கு ஆண் வாரிசு இல்லை என்பதால் அவருக்கு ஆண் பிள்ளை பிறக்க வேண்டும். எனக்கு 100 குழந்தைகள் வேண்டும்" என வேண்டினாள்.
சற்றும் யோசிக்காத எமன் "நீ வேண்டிய வரங்களைத் தந்தோம்" என்றார்.

எமனின் வரத்தை பயன்படுத்திக் கொண்ட சாவித்திரி, "எனக்கு நூறு குழந்தைகள் பிறக்க வேண்டும் என்றால் என் கணவன் உயிருடன் இருக்க வேண்டும் அல்லவா. அதனால் என் கணவரின் உயிரைத் திருப்பிக் கொடுங்கள்" என்று யாசித்தாள்.

இதுவரை என்னை யாரும் பார்த்ததில்லை. உன் பதிவிரதை கற்பின் மகிமையால் என்னை நீ பார்த்தது மட்டுமின்றி, என்னுடன் வாதம் செய்து அதில் வெற்றியும் பெற்றுவிட்டாய். அதனால் நீ வேண்டிய வரங்கள் அனைத்தும் கிடைக்கட்டும் என்றார்.
மாசியும், பங்குனியும் சேரும் சமயத்தில் உன் கணவன் உயிர்பெறுவான் என்றார்.

இந்த உலகம் உள்ளளவும் உன்னை நினைத்து விரதமிருக்கும் பெண்களுக்கு உன்னைப் போல நீண்ட ஆயுள் கொண்ட கணவன் கிடைத்து, தம்பதியர் மனமொத்து நீடூழி வாழ்வார்கள் என்று அருள் புரிந்து அங்கிருந்து மறைந்தார்.

வரத்தைப் பெற்ற சாவித்திரி கணவனை காட்டில் விட்டுச் சென்ற இடத்திற்குத் திரும்பி வந்து தன் மடியில் கிடத்தினாள். சிறிது நேரத்தில் சத்தியவானின் உயிர் திரும்ப கிடைத்தது. தூக்கத்திலிருந்து கண் விழித்தது போல எழுந்த கணவனிடம் நடந்த விஷயத்தைக் கூறினாள்.

காரடையான் நோன்பு எப்போது?
தன் கணவனின் உயிரைப் பறித்துச் சென்ற எமனுடன் வாதாடி, கணவனின் உயிரை மீட்ட சாவித்திரியின் பதிவிரதத்தைப் போற்றும் விதமாக, ஒவ்வொரு ஆண்டும் மாசி மற்றும் பங்குனி மாதம் சேரும் நன்னாளில் இந்த காரடையான் நோன்பை பெண்கள் அனுஷ்டித்து வருகின்றனர்.

இந்தாண்டு 2026 மார்ச் 14ம் தேதி (சனிக்கிழமை) இந்த விரதம் கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்த விரதத்தைக் கடைப்பிடிப்பதால் சத்தியவானைப் போல நீடூழி வாழ்ந்து, தன் கணவனுடன் நீண்ட மாங்கல்ய பாக்கியத்தை அருள வேண்டும் என பெண்கள் விரதத்தைக் கடைப்பிடிக்கின்றனர்.
அம்பாளே சொன்ன பெண்களுக்கான ப்ரத்யேக விரதமிது.

சங்கல்பம்
மம தீர்க்க சௌமாங்கல்ய
அவாப்த்யர்த்தம்
மம பர்துச்ச அன்யோன்ய ப்ரீதி
அபி வ்ருத்தியர்த்தம்
அவியோகார்த்தம்
ஸ்ரீ காமாக்ஷி பூஜாம் கரிஷ்யே
சரடு மாற்றும்போது

தோரம் க்ருஹ்ணாமி
ஸுபகே ஸஹாரித்ரம்
தராம்யஹம்
பர்து: ஆயுஸ் ஸித்த்யர்தம்
ஸுப்ரீதா பவ ஸர்வதா
த்யானம்
ஏகாம்பர நாத தயிதாம்
காமாக்ஷிம்
புவனேஸ்வரீம் த்யாயாமி
ஹ்ருதயே தேவீம்
வாஞ்சி தார்த்த ப்ரதாயினீம்
நைவேத்யம்*
உருகாத வெண்ணையும்
ஓரடையும் நான் தருவேன்
ஒருக்காலும் என் கணவர்
என்னை பிரியாதிருக்க
வரமருள்வாய்



ரமா குருமூர்த்தி
எழுத்தாளர்/அஸ்ட்ராலஜர்
மடிப்பாக்கம்

## தினம் ஒரு தலைவர்கள்

# காகா காலேல்கர் வரலாறு

1985 ஆம் ஆண்டு இந்தியாவின் தபால் தலையில் கலேல்கர்.
நாடாளுமன்ற உறுப்பினர், ராஜ்யசபா பதவியில்
3 ஏப்ரல் 1952  2 ஏப்ரல் 1964
தனிப்பட்ட விவரங்கள்
பிறந்தது தத்தாத்ரேய பாலகிருஷ்ண காலேல்கர்
1 டிசம்பர் 1885
சதாரா , மகாராஷ்டிரா
இறந்தார் 21 ஆகஸ்ட் 1981 (வயது 95) புது தில்லி
தேசியம் இந்தியன்
அல்மா மேட்டர் பெர்குசன் கல்லூரி தொழில்
சமூக சீர்திருத்தவாதி, செயற்பாட்டாளர்
தொழில் எழுத்தாளர்
காகா காலேல்கர் என்று பிரபலமாக அறியப்படும் தத்தாத்ரேய பாலகிருஷ்ணா காலேல்கர் (டிசம்பர் 1, 1885 - ஆகஸ்ட் 21, 1981) ஒரு இந்திய சுதந்திர ஆர்வலர், சமூக சீர்திருத்தவாதி, பத்திரிகையாளர் மற்றும் மகாத்மா காந்தியின் தத்துவம் மற்றும் முறைகளின் சிறந்த பின்பற்றுபவர் ஆவார் .

வாழ்க்கை வரலாறு
கலேல்கர் 1885 டிசம்பர் 1 ஆம் தேதி சதாராவில் பிறந்தார். மகாராஷ்டிராவின் சாவந்த்வாடிக்கு அருகிலுள்ள அவரது குடும்பத்தின் மூதாதையர் கிராமமான கலேலியில் இருந்து அவருக்கு காலேல்கர் என்ற குடும்பப்பெயர் வழங்கப்பட்டது.
அவர் 1903 இல் மெட்ரிகுலேஷன் படித்து 1907 இல் புனேவில் உள்ள பெர்குசன் கல்லூரியில் தத்துவத்தில் இளங்கலை பட்டம் பெற்றார் . அவர் எல். எல்.பி முதலாமாண்டு தேர்வில் தேர்ச்சி பெற்று 1908 இல் பெல்காமில் உள்ள கணேஷ் வித்யாலயாவில் சேர்ந்தார். ராஷ்ட்ரமத் என்ற தேசியவாத மராத்தி நாளிதழின் ஆசிரியர் குழுவில் சிறிது காலம் பணியாற்றினார், பின்னர் 1910 இல் பரோடாவில் உள்ள கங்காநாத் வித்யாலயாவில் ஆசிரியராகப் பணியாற்றினார். 1912 ஆம் ஆண்டில், பிரிட்டிஷ் அரசாங்கம் அதன் தேசியவாத உணர்வு காரணமாக அந்தப் பள்ளியை வலுக்கட்டாயமாக மூடியது. அவர் கால்நடையாக இமயமலைக்குச் சென்றார், பின்னர் 1913 இல் பர்மா ( மியான்மர் ) விஜயத்தில் ஆச்சார்யா கிருபளானியுடன் சேர்ந்தார். அவர் முதன்முதலில் மகாத்மா காந்தியை 1915 இல் சந்தித்தார்.

காந்தியின் தாக்கத்தால், அவர் சபர்மதி ஆசிரமத்தில் உறுப்பினரானார் . சபர்மதி ஆசிரமத்தின் ராஷ்ட்ரிய ஷாலாவில்



கற்பித்தார். சிறிது காலம், ஆசிரம வளாகத்திலிருந்து நடத்தப்பட்ட சர்வோதயா பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றினார். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றதற்காக அவர் பல முறை சிறையில் அடைக்கப்பட்டார் . காந்தியின் ஊக்கத்துடன், அகமதாபாத்தில் குஜராத் வித்யாபீடத்தை நிறுவுவதில் தீவிரப் பங்காற்றினார் , மேலும் 1928 முதல் 1935 வரை அதன் துணைவேந்தராகப் பணியாற்றினார். 1939 இல் குஜராத் வித்யாபீடத்திலிருந்து ஓய்வு பெற்றார். மகாத்மா காந்தி அவரை சவாய் குஜராத்தி என்று அழைத்தார் , இது ஒரு குஜராத்தியை விட கால் பங்கு அதிகம்.

1935 ஆம் ஆண்டில், கலேல்கர் , இந்தி - இந்துஸ்தானி மொழியை இந்தியாவின் தேசிய மொழியாகப் பிரபலப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ராஷ்டபாஷா சமிதி என்ற குழுவின் உறுப்பினரானார் . 1948 முதல் தனது மரணம் வரை காந்தி ஸ்மாரக் நிதியில் அவர் தீவிரமாக இருந்தார்.

அவர் 1952 முதல் 1964 வரை ராஜ்யசபா உறுப்பினராக நியமிக்கப்பட்டார் , பின்னர் 1953 இல் பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். அவர் 1959 இல் குஜராத்தி சாகித்ய பரிஷத்திற்கு தலைமை தாங்கினார். 1967 இல் காந்தி வித்யாபீடத்தை, வேட்சியை நிறுவி அதன் துணைவேந்தராகப் பணியாற்றினார்.
தெளிவுபடுத்தல் தேவை ]
அவர் ஆகஸ்ட் 21, 1981 அன்று இறந்தார்.
தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள்
காலேல்கர் குஜராத்தி , மராத்தி மற்றும் இந்தி மொழிகளில் ஏராளமான பயணக் குறிப்புகள் உட்பட பல புத்தகங்களை எழுதினார் . காலேல்கரின் புத்தகங்களின் ஒரு பகுதி பட்டியல் பின்வருமாறு:
காந்திய சிந்தனையின் சாராம்சம் (ஆங்கிலம்)
இன்ஸ்பிரேஷன் (ஆங்கிலம்) இல் சுயவிவரங்கள்
பாபுவின் தவறான பார்வைகள் (ஆங்கிலம்)
மகாத்மா காந்தியின் சுதேசி நற்செய்தி (ஆங்கிலம்)
மகாத்மா காந்தி கா சுதேசி தர்மம் (இந்தி)
ராஷ்ட்ரிய ஷிக்ஷா கா ஆதர்ஷா (இந்தி)
ஸ்மரண் யாத்திரை (மராத்தி)
உத்தரேகாடில் பிந்தி (மராத்தி) (ஆங்கிலத்தில் ஈவ் பிஹேண்ட் தி பார்ஸ் என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது )
ஹிந்தல்க்யாச்சா பிரசாத் (மராத்தி)
லோக்-மாதா (மராத்தி)
லதாஞ்சே தந்தவ் (மராத்தி)
இமயமலைப் பிரவாஸ் (மராத்தி)
இமயமலை பிரவாஸ் (குஜராத்தி)
ஜீவன்-வியாவஸ்தா (குஜராத்தி)
பூர்வா ஆப்பிரிக்கமேன் (குஜராத்தி)
ஜீவவனோ ஆனந்த் (குஜராத்தி)
ஜீவதா தேவாரோ (குஜராத்தி)
மாரா சன்ஸ்மாரானோ (குஜராத்தி)
உகமானோ தேஷ் (குஜராத்தி)
ஒட்டெராட்டி திவாரோ (குஜராத்தி) (ஆங்கிலத்தில் என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது )
பிரம்மதேசனோ பிரவாஸ் (குஜராத்தி)
ரகத்வானோ ஆனந்த் (குஜராத்தி)
பல பகுதி காக்கா காலேல்கர் கிரந்தவாலி
பகுதி 5: ஆத்மசரித்ரா
பகுதி 6: சரித்திர கீர்த்தனை
பகுதி 7: கீதா தரிசனம்
பகுதி 8: தர்மம்
பகுதி 9: சாகித்ய
பகுதி 10: நாட்குறிப்பு
பகுதி 11: பத்ரா
சஹிஜன் கா பெட்
அங்கீகாரம்
குஜராத்தி மொழியில் எழுதிய "ஜீவன்-வியாவஸ்தா" என்ற கட்டுரைத் தொகுப்பிற்காக 1965 ஆம் ஆண்டு காலேல்கருக்கு சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டது. அவரது இலக்கிய சாதனைகளுக்காக 1971 ஆம் ஆண்டு சாகித்ய அகாடமி பெல்லோஷிப் விருது வழங்கப்பட்டது .

1964 ஆம் ஆண்டு இந்திய அரசு அவருக்கு பத்ம விபூஷண் ( பாரத ரத்னாவுக்குப் பிறகு இந்தியாவின் இரண்டாவது மிக உயர்ந்த குடிமகன் விருது ) வழங்கியது. 1985 ஆம் ஆண்டு அவரது நினைவாக ஒரு நினைவு முத்திரையையும் வெளியிட்டது.

# சோனியா காந்தி சில நாட்கள் டாக்டர்கள் கண்காணிப்பில் இருப்பார் என தகவல்



**புதுடெல்லி, மார்ச் 27:**

காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி (வயது 79). இவருக்கு இன்று உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இதையடுத்து அவர் டெல்லியில் உள்ள கங்காராம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

காற்று மாசு உள்ளிட்ட பருவநிலை மாற்றம் போன்றவற்றால் சோனியா காந்திக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள சோனியா காந்தி நலமுடன் உள்ளதாக மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது. அதேவேளை, சோனியா காந்தி சில நாட்கள் மருத்துவமனை டாக்டர்கள் கண்காணிப்பில் இருப்பார் என தகவல் வெளியாகியுள்ளார்.

# "பாகிஸ்தானைப் போல இந்தியா தரகர் நாடு அல்ல.." - வெளியுறவு மந்திரி ஜெய்சங்கர்

**புதுடெல்லி, மார்ச் 27:**

மேற்காசிய பகுதியில் அமைந்த ஈரான் நாட்டை அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாக இணைந்து வான்வழியாக ஏவுகணைகளை கொண்டு, கடந்த பிப்ரவரி 28-ந்தேதி கடுமையாக தாக்கின. தொடர்ந்து நடந்த தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். ஈரானும் இதற்கு பதிலடி கொடுத்து வருகிறது. அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் அதன் தளங்கள் அமைந்த பகுதிகள் மீது கடுமையாக தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால், மேற்காசியாவில் தொடர்ந்து பதற்ற நிலை நீடித்து வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, உலக நாடுகளுக்கு சரக்கு கப்பல் செல்ல கூடிய முக்கிய ஹார்மூஸ் ஜலசந்தியை ஈரான் மூடியது. மீறி செல்லும் கப்பல்கள் தாக்கப்படும் சூழல் காணப்படுகிறது. எனினும், நட்பு நாடுகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சூழலில் ஈரான் - அமெரிக்கா இடையே மத்தியஸ்தம் செய்ய முயற்சிக்கும் பாகிஸ்தானை 'தரகர் நாடு' என வெளியுறவு மந்திரி ஜெய்சங்கர் விமர்சனம் செய்துள்ளார்.

இதுதொடர்பாக மத்திய கிழக்குப் போர் குறித்த அனைத்து கட்சிக் கூட்டத்தில் பேசிய அவர், "இந்தியா ஒருபோதும் பாகிஸ்தானைப் போல தரகர் நாடாக செயல்படாது. நமது வெளியுறவுக் கொள்கை தன்னாட்சி உடையது. நாங்கள் யாருக்காகவும் மத்தியஸ்தம் செய்வதில்லை. பாகிஸ்தானுக்கு இடைத்தரகர் வேலை ஒன்றும் புதிதல்ல. 1981 முதலே அமெரிக்கா தனது தேவைகளுக்கு பாகிஸ்தானைப் பயன்படுத்தி வருகிறது" என்று ஜெய்சங்கர் கூறினார்.

முன்னதாக நாடாளுமன்றத்தில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், பாகிஸ்தான் ஒரு மத்தியஸ்தரின் பங்கை வகிக்கிறது என்றும், இந்தியா ஒரு மவுன சாட்சியாக மாறிவிட்டது என்றும் காங்கிரஸ் தலைவர் தாரிக் அன்வர் விமர்சித்திருந்தார்.

இந்தக் கூட்டத்தில் பாதுகாப்பு மந்திரி ராஜ்நாத் சிங், உள்துறை மந்திரி அமித்ஷா, வெளியுறவு மந்திரி ஜெய்சங்கர், நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் மற்றும் பல மத்திய மந்திரிகள் கலந்து கொண்டனர். இருப்பினும், எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கலந்துகொள்ளவில்லை,

மேலும் திரிணாமூல் காங்கிரசும் (TMC) கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

# சமையல் காஸ் சிலிண்டர் முன்பதிவு அவகாசம் நீட்டிப்பா? – மத்திய அரசு புதிய விளக்கம்




**புதுடெல்லி, மார்ச் 27:**

சமையல் காஸ் சிலிண்டர் முன்பதிவில் கட்டுப்பாடு எதுவும் விதிக்கவில்லை என்றும், நகரப் பகுதிகளில் 25 நாட்களும் ஊரகப் பகுதிகளில் 45 நாட்களும் காஸ் சிலிண்டர் முன்பதிவுக்கு அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது என்றும் மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது.

இது குறித்து பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'சமையல் எரிவாயு சிலிண்டர் முன்பதிவுக்கான காலக்கெடு மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக சில செய்தி அறிக்கைகளும், சமூக ஊடகப் பதிவுகளும் வெளியாகியுள்ளதாக மத்திய அரசின் கவனத்துக்கு வந்துள்ளது.

அதன்படி, பிரதமரின் உஜ்வாலா திட்டத்தின் கீழ், சமையல் எரிவாயு சிலிண்டர் இணைப்புகளுக்கு 45 நாட்கள், ஒற்றை சிலிண்டர் இணைப்புகளுக்கு 25 நாட்கள் மற்றும் இரட்டை சிலிண்டர் இணைப்புகளுக்கு 35 நாட்கள் என முன்பதிவு செய்வதற்கான புதிய காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டு உள்ளதாக அந்த செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால், அத்தகைய காலக்கெடு எதுவும் விதிக்கப்படவில்லை என்று இதன்மூலம் மத்திய அரசு தெளிவுபடுத்துகிறது. தற்போது நடைமுறையில் உள்ள சிலிண்டருக்கான முன்பதிவு செய்வதற்கான காலக்கெடுவில் எவ்வித மாற்றமும் இல்லை என்றும், அவை, நகர்ப்புறங்களில் 25 நாட்கள் என்றும், கிராமப்புறங்களில் 45 நாட்கள் என்றும் (இணைப்பு வகை எதுவாக இருப்பினும்) ஏற்கெனவே இருக்கும் நடைமுறை தொடர்வதாகவும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

# துருக்கி குகையில் இருந்து கிடைத்த அரிய வகை என ஏமாற்றி ரூ.15 லட்சத்துக்கு தேன் விற்ற சாமியார் கைது



**நாசிக், மார்ச் 27:**

துருக்கி குகையிலிருந்து கிடைக்கும் அரிய வகை தேன் என்று கூறி ரூ.15 லட்சத்துக்கு விற்ற சாமியார் கைது செய்யப்பட்டார். மேலும், அவர் மீது பாலியல் வன்கொடுமை புகாரும் கூறப்பட்டுள்ளது.

மகாராஷ்டிர மாநிலம் நாசிக்கை சேர்ந்தவர் ஜோதிடர் அசோக் காரத். கடற்படையில் பணியாற்றி ஓய்வுபெற்ற அசோக், சாமியார் என்றும் ஜோதிடர் என்றும் கூறிக் கொண்டு மக்களிடம் பணத்தை ஏமாற்றி வந்துள்ளார். இந்நிலையில், ஒரு பெண் கடந்த வாரம் நாசிக் போலீஸில் அசோக் மீது பாலியல் வன்கொடுமை புகார் செய்தார். இதன் அடிப்படையில் போலீஸார் அசோக்கை கைது செய்தனர்.

இது குறித்து போலீஸ் உயர் அதிகாரி ஒருவர் கூறும்போது, "அவர் துருக்கியிலிருந்து கிடைக்கும் அரிய வகை 'எல்விஷ்' வகை தேன் என்று கூறி ஒரு கிலோவை ரூ.15 லட்சத்துக்கு விற்பனை செய்து வந்துள்ளார். இது ஒரு மாயாஜால தேன் என்றும், இதைச் சாப்பிட்டால் இளமையாக மாறிவிடலாம் என்றும் கூறியுள்ளார்.

நானும் இதைக் குடித்துப் பார்த்தேன். நீங்களும் இதைக் குடித்து பலன் பெறுங்கள் என்று தன்னிடம் வந்தவர்களிடம் கூறி அவர் ஏமாற்றியுள்ளார். மேலும், மகாராஷ்டிர அரசியல்வாதிகளும் இவருடைய வாடிக்கையாளர்களாக இருந்துள்ளனர். இந்த எல்விஷ் வகை தேன் ஒரு கிலோ ரூ.9 லட்சத்துக்கு விற்பனையாகிறது. இது துருக்கியின் ஆர்ட்வின் நகரிலுள்ள 1,800 மீட்டர் ஆழத்திலுள்ள குகையிலிருந்து எடுக்கப்படுகிறது.

அந்தப் பெயரைக் கூறி இவர் ஏராளமான தேன் வகைகளை இங்கு விற்று பலரை ஏமாற்றியுள்ளார். அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி 5 நாள் போலீஸ் காவலில் எடுத்துள்ளோம். அவரது வீடு அருகே துப்பாக்கி, தோட்டாக்கள் உள்ளிட்டவற்றை பறிமுதல் செய்துள்ளோம்.

# வாகன ஓட்டிகள் பீதி அடைய வேண்டாம்: பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு இல்லை- மத்திய அரசு விளக்கம்

**புதுடெல்லி, மார்ச் 27:**

பெட்ரோலிய அமைச்சக இணைச் செயலாளர் சுஜாதா சர்மா செய்தியாளர்களிடம் கூறுகையில், 'அனைத்து சுத்திகரிப்பு நிலையங்களும் போதுமான கச்சா எண்ணெயுடன் இயங்கி வருகின்றன. நாட்டில் போதுமான அளவு பெட்ரோல்-டீசல் இருப்பு உள்ளது. எந்தவித தட்டுப்பாடும் இல்லை. நாடு முழுவதும் சில்லறை விற்பனை நிலையங்கள் இயல்பாக இயங்கி வருகின்றன' எனக் கூறினார். இந்த விவகாரத்தில் வதந்திகளை நம்ப வேண்டாம் எனக் கூறிய அவர், நுகர்வோரை எரிபொருள் சென்றடைய அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருவதாகவும் தெரிவித்தார். வதந்திகளை நம்பி சில பகுதிகளில் மக்கள் அவசரப்பட்டு பெட்ரோல், டீசல் வாங்குவதாகவும், அது தேவையில்லை என்றும் சுஜாதா சர்மா கூறினார். கியாஸ் சிலிண்டர் விநியோகத்தைப் பொறுத்தவரை, புவிசார் அரசியல் சூழ்நிலை காரணமாக இந்தியாவுக்கு வருவது தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகிறது எனக் கூறிய அவர், இருப்பினும் உள்நாட்டில் தட்டுப்பாடு எதுவும் பதிவாகவில்லை எனவும், சிலிண்டர் விநியோகம் வழக்கம்போல் தொடர்வதாகவும் தெரிவித்தார்.

# சாலையின் நடுவே மின்கம்பம்... வாகன ஓட்டிகள் அதிர்ச்சி - வைரல் வீடியோ



**லக்னோ, மார்ச் 27:**

உத்திரபிரதேச மாநிலத்தில் ஆபத்தை விளைவிக்கும் விதமாக சாலையின் நடுவே மின்கம்பம் அமைக்கப்பட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. இந்த தொடர்பான வீடியோ சமூகவலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது. வாகனங்கள் இந்த மின்கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளாகும் அபாயம் இருப்பதால், உடனடியாக அகற்ற கோரி பொது மக்களும், வாகன ஓட்டிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுகுறித்து இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) விளக்கம் அளித்துள்ளது. மின்கம்பத்தை மாற்றுவதற்கான நிலம் உடனடியாக கிடைக்காததால், அதை அகற்ற முடியவில்லை என தெரிவித்துள்ளது. மேலும், நிலம் கையகப்படுத்தும் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும், தேவையான நிலம் கிடைத்தவுடன் மின்கம்பம் மாற்றப்படும் என்றும் லக்னோ பிராந்திய அலுவலகம் தெரிவித்துள்ளது.

# 'அரசு நிகழ்ச்சிகளில் வந்தே மாதரம் பாடுவது கட்டாயமல்ல' - சுப்ரீம் கோர்ட்டு



**புதுடெல்லி, மார்ச் 27:**

அரசு நிகழ்ச்சிகளில் 'வந்தே மாதரம்' பாட வேண்டும் என்ற ஒன்றிய அரசின் வழிகாட்டுதலை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு, அந்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பித்தது. நீதிமன்றம் இந்த சுற்றறிக்கை ஒரு "அறிவுறுத்தல்" மட்டுமே என்றும், அதில் பாடலை கட்டாயமாக்கவில்லை என்றும் தெரிவித்தது. மேலும், அதை பின்பற்றாதவர்களுக்கு எந்தவித தண்டனையும் குறிப்பிடப்படவில்லை என்றும் கூறியது. மத்திய அரசு சமீபத்தில் வெளியிட்ட புதிய விதிமுறைகளில், அரசு நிகழ்ச்சிகளில் தேசிய கீதத்திற்கு முன்பாக வந்தே மாதரம் பாடப்பட வேண்டும் என்றும், அப்போது அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. 'வந்தே மாதரம்' பாடல் 1875ஆம் ஆண்டு பங்கிம் சந்திர சட்டர்ஜி எழுதியது.

# 32 திருத்தங்களுடன் 2026 நிதி மசோதா மக்களவையில் நிறைவேற்றம்

**புதுடெல்லி, மார்ச் 27:**

நாடாளுமன்ற மக்களவையில் இன்று 2026-ம் ஆண்டுக்கான நிதி மசோதா 32 அரசுத் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம், மக்களவையில் நிதிநிலை அறிக்கை ஒப்புதலுக்கான நடைமுறை நிறைவு செய்யப்பட்டது.


இனி நாடாளுமன்ற மேலவையான மாநிலங்களவைக்கு இந்த மசோதா பரிசீலனைக்காக அனுப்பப்படும். மாநிலங்களவை இந்த மசோதாவிற்கு ஒப்புதல் அளித்த பிறகு, 2026-27ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை செயல்முறை நிறைவடையும்.

மத்திய நிதிநிலை அறிக்கையில், 2026-27ம் நிதியாண்டிற்கான மொத்த செலவினம் ரூ.53.47 லட்சம் கோடியாக இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. இது, வரும் மார்ச் 31-ந்தேதியோடு முடிவடையும் நடப்பு நிதியாண்டை விட 7.7 சதவீதம் அதிகமாகும்.

அதே போல், மத்திய நிதிநிலை அறிக்கையில், அடுத்த நிதியாண்டிற்கான மொத்த மூலதனச் செலவு ரூ.12.2 லட்சம் கோடி என்று முன்மொழியப்பட்டுள்ளது. மேலும், அடுத்த நிதியாண்டில் மொத்த வரி வருவாய் வசூல் ரூ.44.04 லட்சம் கோடி, கடனாக வாங்கும் தொகை ரூ.17.2 லட்சம் கோடியாக இருக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

2027-ம் நிதியாண்டிற்கான நிதிப் பற்றாக்குறை, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.3 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இது நடப்பு நிதியாண்டில் இருந்த 4.4 சதவீதத்தை விட குறைவு என்பது குறிப்பிடத்தக்கது.

# ஹோட்டல்களில் "எல்பிஜி கட்டணங்கள்' விதிக்கக் கூடாது: மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் அறிவுரை




**புதுடெல்லி, மார்ச் 27:**

உணவகங்களில் "எல்பிஜி கட்டணங்கள்' மற்றும் அது போன்றவற்றை விதிப்பது தொடர்பான நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளைத் தடுக்கும் வகையில் மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் (சிசிபிஏ) அறிவுரை வழங்கியுள்ளது.

இந்த நடைமுறை நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2019-இன் கீழ் நியாயமற்ற வர்த்தகமாகக் கருதப்படுகிறது என்றும் ஆணையம் தெரிவித்துள்ளது.


இது தொடர்பாக மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சக அதிகாரிகள் புதன்கிழமை தெரிவித்திருப்பதாவது: நுகர்வோர் கட்டணப் பட்டியல்களில் (பில்) எல்பிஜி கட்டணங்கள், எரிவாயு கூடுதல் கட்டணம் மற்றும் எரிபொருள் செலவு மீட்பு போன்ற கூடுதல் கட்டணங்களை ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் விதிப்பதை மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் தீவிரமாகக் கவனத்தில் கொண்டுள்ளது.

இதுபோன்ற கட்டணங்கள் தானாகவே விதிக்கப்படக்கூடாது. அதை மீறுவது கடுமையான நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும்.

எரிபொருள், எல்பிஜி, மின்சாரம் மற்றும் பிற செயல்பாட்டுச் செலவுகள் போன்ற உள்ளீட்டுச் செலவுகள் ஒரு வணிகத்தை நடத்துவதற்கான செலவின் ஒரு பகுதியாகும். அவை உணவுப் பட்டியலிலுள்ள பொருள்களின் விலையில் சேர்க்கப்பட வேண்டும் என்றும் சிசிபிஏ தெளிவுபடுத்தியுள்ளது.

அத்தகைய செலவுகளைத் தனித்தனியான கட்டாயக் கட்டணங்கள் மூலம் வசூலிப்பது, நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2019-இன் பிரிவு 2(47) இன் கீழ், நியாயமற்ற வர்த்தக நடைமுறையாகும். இதுபோன்ற கூடுதல் கட்டணத்தால் பாதிக்கப்படும் நுகர்வோர், 1915 என்ற எண்ணைத் தொடர்புகொண்டோ அல்லது தேசிய நுகர்வோர் ஹெல்ப்லைன் கைப்பேசி செயலி மூலமோ தேசிய நுகர்வோர் உதவி மையத்தில் புகார் பதிவு செய்யலாம். இணையதளத்திலும் புகாரைப் பதிவு செய்யலாம். மாவட்ட ஆட்சியரிடமோ அல்லது நேரடியாக சிசிபிஏவிடமோ புகார் அளிக்கலாம். அந்தப் புகாரின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மகாதேவ் சூதாட்ட செயலி வழக்கு: துபை புர்ஜ் கலீஃபா வீடுகள் உள்பட ரூ.1,700 கோடி சொத்துகள் முடக்கம்



**புதுடெல்லி, மார்ச் 27:**

மகாதேவ் இணையவழி சூதாட்ட செயலி தொடர்பான வழக்கில், துபையில் உள்ள புகழ்பெற்ற புர்ஜ் கலீஃபா கட்டடத்தில் உள்ள விலையுயர்ந்த சில வீடுகள் உள்பட ரூ.1,700 கோடி மதிப்பிலான சொத்துகளை அமலாக்கத் துறை முடக்கியுள்ளது.

சத்தீஸ்கரில் முக்கிய அரசியல்வாதிகள் மற்றும் உயரதிகாரிகள் தொடர்புடைய மகாதேவ் சூதாட்ட செயலி வழக்கில், பண முறைகேடு தடுப்புச் சட்டத்தின்கீழ் அமலாக்கத் துறை விசாரணை மேற்கொண்டு வருகிறது. இந்தச் செயலியின் உரிமையாளர்களான செளரவ் சந்திரகர், ரவி உப்பல் ஆகியோர், சூதாட்ட வலைதளங்கள் மற்றும் விளையாட்டுகளுக்கு வாடிக்கையாளர்களைப் பெற்றுதரவும், அந்தத் தளங்களின் நிதிசார் செயல்பாடுகளைக் கையாளவும் மகாதேவ் செயலி மூலம் சட்டவிரோத செயல்பாடுகளில் ஈடுபட்டு, பொதுமக்களை ஏமாற்றியதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது. தற்போது ஐக்கிய அரபு அமீரகத்தில் வீட்டுச்சிறையில் உள்ள செளரவ் சந்திரகரை நாடுகடத்தி கொண்டுவர இந்தியா நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மற்றொரு உரிமையாளரான ரவி உப்பல், ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்துவனாட்டு தீவுக்கு தப்பிவிட்டதாகக் கூறப்படுகிறது. இந்தச் சூழலில், சந்திரகர், அவரது கூட்டாளிகள் மற்றும் அவர் தொடர்புடைய நிறுவனங்களுக்குச் சொந்தமாக இந்தியா மற்றும் துபையில் உள்ள ரூ.1,700 கோடி மதிப்பிலான சொத்துகளை அமலாக்கத் துறை முடக்கியுள்ளது. துபையில் உள்ள உலகின் மிக உயரமான கட்டடமான புர்ஜ் கலீஃபாவில் உள்ள விலையுயர்ந்த சில வீடுகள் உள்பட பல்வேறு வீடுகள் மற்றும் பங்களாக்கள் இதில் அடங்கும்.

# வங்கிகளில் உரிமை கோரப்படாத ரூ.60 ஆயிரம் கோடி ரிசர்வ் வங்கிக்கு மாற்றம்

**புதுடெல்லி, மார்ச் 27:**



கடந்த ஜனவரி மாத இறுதி நிலவரப்படி, பொதுத்துறை வங்கிகளில் இருந்து உரிமை கோரப்படாமல் இருந்த மொத்த வைப்புத்தொகை ரூ.60,518 கோடி அளவாக உயர்ந்துள்ளது என்று மத்திய அரசு கூறியுள்ளது. இது தொடர்பாக மாநிலங்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு மத்திய நிதித்துறை இணை மந்திரி பங்கஜ் சவுத்ரி அளித்த எழுத்துபூர்வ பதிலில் கூறப்பட்டுள்ளதாவது: 2026, ஜனவரி இறுதி வரையிலான நிலவரப்படி, பொதுத் துறை வங்கிகளில் இருந்து ரிசர்வ் வங்கியின் வாடிக்கையாளர்கள் விழிப்புணர்வு நிதிக்கு மாற்றப்பட்ட உரிமை கோரப்படாத வைப்புத்தொகை ரூ.60,518 கோடியாகும். பிப்ரவரி இறுதி வரையிலான நிலவரப்படி, காப்பீடுதாரர்களால் உரிமை கோரப்படாத காப்பீட்டுத் தொகை ரூ.8,973.89 கோடி. இதேபோல், செபி ஒழுங்குமுறைகளின்கீழ், பரஸ்பர நிதியில் முதலீட்டாளர்களால் உரிமை கோரப்படாத தொகையின் மதிப்பு ரூ.3,749.34 கோடியாக உள்ளது. என்றார்.




# சென்னை | காவல் ஆணையர் அலுவலகம் முன்பு தற்கொலைக்கு முயன்ற இளம்பெண்




**சென்னை, மார்ச்.27:** வேப்பேரியில் உள்ள சென்னை காவல் ஆணையர் அலுவலகத்துக்கு நேற்று இளம் பெண் ஒருவர் வந்தார். அவர் மறைத்து வைத்திருந்த விஷ பாட்டிலை எடுத்து அதில் இருந்த விஷத்தை குடிக்க முயன்றார்.

இதைக் கண்டு அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீஸார் அதிர்ச்சி அடைந்தனர். உடனடியாக, விஷப்பாட்டிலை பறிமுதல் செய்து, அந்த பெண்ணை காப்பாற்றினர்.

பின்னர், போலீஸாரின் விசாரணையில், தற்கொலைக்கு முயன்றவர் விருகம்பாக்கத்தைச் சேர்ந்த விஜயலட்சுமி (38) என்பது தெரியவந்தது.

காதலன் வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டு தன்னை ஏமாற்றி விட்டார். இந்த விரக்தியில் தற்கொலை செய்து கொள்ள வந்தேன்.

என்னை ஏமாற்றிய காதலன் மீது போலீஸார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என போலீஸாரிடம் அவர் முறையிட்டார். இந்த விவகாரம் தொடர்பாக வேப்பேரி போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

# நடிகையின் நகையை வாங்கி மோசடி: சின்னத்திரை துணை இயக்குநர் மீது புகார்

**பூந்தமல்லி, மார்ச்.27:** சின்னத்திரை நடிகை தாமரைச்செல்வியின் தங்க நகையை வாங்கி மோசடி செய்ததாக, சின்னத் திரை துணை இயக்குநர் ஆதி மீது எஸ்ஆர்எம்சி காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

தனியார் தொலைக்காட்சி ஒன்றில் நடந்த 'பிக் பாஸ்ட நிகழ்ச்சியில் பங்கு பெற்று பிரபலமானவர் தாமரைச்செல்வி. இவர் தனியார் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகி வரும் சின்னத்திரை தொடர்களில் நடித்து வருகிறார்.

இந்நிலையில், தாமரைச்செல்வியின் கணவர் பார்த்தசாரதி, எஸ்ஆர்எம்சி (போரூர்) காவல் நிலையத்தில் சில தினங்களுக்கு முன்பு புகார் ஒன்றை அளித்தார்.

அதில் பார்த்தசாரதி தெரிவித்துள்ளதாவது: சின்னத் திரை தொடர்களின் துணை இயக்குநரான ஆதி, கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு என் குடும்பத்துக்கு அறிமுகமாகி, என் குடும்பத்தில் ஒருவராகப் பழகி வந்தார்.

இந்நிலையில் கடந்த ஆண்டு அவசரத் தேவைக்காக ஆதி, என்னிடம் பணம் கேட்டபோது, பணம் இல்லாததால் தாமரைச்செல்வியின் 3 பவுன் தங்க நகைகளை கொடுத்து அடகு வைத்துக்கொள்ளுமாறு கூறினேன்.

இதையடுத்து, அந்நகைகளை அய்யப்பன்தாங்கல் பகுதியில் உள்ள அடகுக் கடை ஒன்றில் ஆதி தன் பெயரிலேயே அடகு வைத்து பணத்தைப் பெற்றுக் கொண்டார்.

அதன் பிறகு, நகைகளை மீட்க சம்பந்தப்பட்ட அடகுக் கடைக்கு நான் சென்று கேட்டபோது, ஆதி அந்த நகையை மீட்டு, அதிக தொகைக்கு விற்றுவிட்டது தெரிய வந்தது. இதுகுறித்து, ஆதியை செல்போனில் பலமுறை தொடர்பு கொண்டு கேட்டும் அவர் முறையான பதில் அளிக்கவில்லை.

என் நகையை கொடுக்காமல் என்னை ஏமாற்றி வரும் ஆதி மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அப்புகாரில் பார்த்தசாரதி தெரிவித்துள்ளார்.

இப்புகார் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வரும் எஸ்ஆர் எம்சி போலீஸார், விசாரணைக்கு வருமாறு சின்னத் திரை தொடர்களின் துணை இயக்குநர் ஆதிக்கு சம்மன் அனுப்பியுள்ளதாக கூறப்படுகிறது. இது தொடர்பாக சின்னத்திரை நடிகை தாமரைச்செல்வி வெளியிட்டுள்ள காணொலி சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

# ராணிப்பேட்டை அருகே குளிக்க சென்றபோது ஏரியில் மூழ்கி 3 மாணவர்கள் பலி



**ராணிப்பேட்டை, மார்ச்.27:** ராணிப்பேட்டை அருகே ஏரியில் குளிக்க சென்ற 3 மாணவர்கள் தண்ணீரில் மூழ்கி இறந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. ராணிப்பேட்டை மாவட்டம் சிப்காட் திரு. வி.க. நகரை சேர்ந்தவர்கள் செல்வம் மகன் பார்த்திபன்(13), சரவணன் மகன் நித்திஷ்(14), கமலகண்ணன் மகன் நித்திஷ்(13).

இவர்கள் 3 பேரும் நண்பர்கள். பார்த்திபன் பெல் ராமகிருஷ்ணா பள்ளியில் 7ம் வகுப்பும், சரவணன் மகன் நித்திஷ், கமலகண்ணன் மகன் நித்திஷ் இருவரும் சிப்காட்டில் உள்ள தனியார் பள்ளியில் 8, 6ம் வகுப்பும் படித்து வந்தனர்.

இந்நிலையில் தற்போது 10ம் வகுப்பு பொதுதேர்வு நடைபெற்று வருவதால் பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. இதனால் பார்த்திபன் உள்ளிட்ட 3 பேரும் நேற்று காலை அருகே உள்ள மணியம்பட்டு ஏரியில் குளிக்க சென்றனர்.

ஆனால் 3 பேருக்கும் நீச்சல் தெரியாததால் தண்ணீரில் மூழ்கினர். தம்பியை காணாமல் தேடிச்சென்ற நித்திஷின் அண்ணன், ஏரிக்கரையில் மாணவர்கள் அணிந்திருந்த துணிகள் இருந்ததை பார்த்து அதிர்ச்சியடைந்தார். சந்தேகத்தின்பேரில் அக்கம்பக்கத்தினர் ஏரியில் இறங்கி தேடினர்.

பின்னர் மாணவர்களை மீட்டு அருகிலுள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது, 3 பேரும் உயிரிழந்ததை டாக்டர்கள் உறுதி செய்தனர். இதுகுறித்து தகவலறிந்த சிப்காட் போலீசார் வந்து சடலங்களை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக வாலாஜா அரசு மருத்துவமனைக்கு அனுப்பினர். மேலும் போலீசார் வழக்குப்பதிந்து விசாரித்து வருகின்றனர். ஏரியில் மூழ்கி 3 மாணவர்கள் பலியான சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# மெரினா கடற்கரை லூப் சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றக்கோரிய வழக்கு வாபஸ் பெறப்பட்டதால் தள்ளுபடி



**சென்னை, மார்ச்.27:** மெரினா லூப் சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றக்கோரி தொடரப்பட்ட வழக்கு வாபஸ் பெறப்பட்டதால், அந்த வழக்கை தள்ளுபடி செய்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை, மெரினா கடற்கரையின் கலங்கரை விளக்கம் முதல் பட்டினப்பாக்கம் வரை உள்ள லூப் சாலை ஆக்கிரமிப்புகளை அகற்றும்படி சென்னை உயர்நீதிமன்றம் கடந்த 2023 மற்றும் 2025-ம் ஆண்டுகளில் உத்தரவிட்டது.

இருப்பினும் அப்பகுதியில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவில்லை எனக்கோரி, ஆனந்த் என்பவர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

அதில், லூப் சாலையை ஆக்கிரமித்து சாலையோரங்களில் உணவகங்கள் அனுமதியின்றி வணிக நோக்கில் நடத்தப்படுவதாகவும், இந்த ஆக்கிரமிப்புகளை அதிகாரிகள் கண்டுகொள்வதில்லை என கூறியிருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள் முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது, அப்பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டுமென ஏற்கெனவே உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில் மீண்டும் எப்படி உத்தரவு பிறப்பிக்க முடியும் எனக் கேள்வி எழுப்பிய நீதிபதிகள், ஒருவேளை உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை அதிகாரிகள் அமல்படுத்தவில்லை என்றால் அதை எதிர்த்து நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தானே தொடர முடியும், என்றனர். அதையடுத்து, மனுதாரர் தரப்பில், இந்த மனுவை வாபஸ் பெற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது. அதையடுத்து நீதிபதிகள் இந்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# மயிலை கபாலீஸ்வரர் கோயில் பங்குனிப் பெருவிழாவில் அதிகார நந்தி வாகனத்தில் சுவாமி வீதி உலா



**சென்னை, மார்ச்.27:** மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலில் அதிகார நந்தி வாகனத்தில் சுவாமி வீதி உலா விமரிசையாக நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர்.

மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலில் இந்த ஆண்டுக்கான பங்குனிப் பெருவிழா கடந்த 23-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. நேற்று முன்தினம் சூரிய வட்டம், சந்திர வட்டம், கிளி, அன்ன வாகனங்களில் சுவாமி வீதி உலா நடைபெற்றது.

இந் நிலையில், அதிகார நந்தி சேவை நேற்று காலை 6 மணிக்கு நடைபெற்றது. அதிகார நந்தி வாகனத்தில் கற்பகாம்பிகை உடனுறை கபாலீஸ்வரர் சர்வ அலங்காரத்தில் நான்கு மாட வீதிகளில் வீதி உலா வந்தார்.

தொடர்ந்து, கந்தருவன், கந்தருவி, மூஷிகம், வெள்விடை வாகனங்களில் பரிவார தேவதைகள் உலா வந்தனர். தொடர்ந்து, திருஞானசம்பந்தர் திருமுலைப்பால் விழா நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர். 30-ல் அறுபத்து மூவர் விழா பங்குனிப் பெருவிழாவின் முக்கிய நிகழ்வுகளான தேரோட்டம் 29-ம் தேதியும், அறுபத்து மூவர் விழா 30-ம் தேதியும் நடைபெற உள்ளன.

இதில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்பார்கள் என்பதால், அதற்கேற்ப அடிப்படை வசதிகளை செய்யும் பணிகளில் கோயில் நிர்வாகத்தினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

# மத்திய அரசு அறிக்கையின்படி தமிழகத்தில் 82.5% பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள்

## நாட்டிலேயே முதலிடம் என தமிழக அரசு பெருமிதம்




**சென்னை, மார்ச்.27:** தமிழகத்தில் 82.5 சதவீத பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் அமைக்கப்பட்டு, நாட்டிலேயே தமிழகம் முதலிடத்தில் உள்ளதாக மத்திய அரசின் அறிக்கையை சுட்டிக்காட்டி தமிழக அரசு பெருமிதம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: கடந்த 2024-25-ம் ஆண்டுக்கான மத்திய அரசின் ஒருங்கிணைந்த மாவட்டக் கல்வி ஆய்வு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, தமிழகத்தில் 82.5 சதவீத அரசுப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் அமைந்துள்ளன.

திறன்மிகு வகுப்பறைகளை கொண்டுள்ளதில் தமிழகம் இந்தியாவில் முதலிடம் பிடித்து சாதனை படைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், பாஜக ஆட்சி செய்யும் மாநிலங்களில் உள்ள பள்ளிகளில், திறன்மிகு வகுப்பறைகள் எண்ணிக்கை மிக மிகக் குறைவாகவே இருப்பதை இந்த அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

அதாவது, குஜராத்தில் 57.1 சதவீதம், மத்தியப் பிரதேசத்தில் 7.6 சதவீதம், மகாராஷ்டிராவில் 4.6 சதவீதம், உத்தரப் பிரதேசத்தில் 3.6 சதவீதம் பள்ளிகளில் மட்டுமே திறன்மிகு வகுப்பறைகள் உள்ளன.

திமுக ஆட்சி 2021-ல் பொறுப்பேற்ற நிலையில், தமிழகத்தில் 43.5 சதவீத பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் இருந்தன. தற்போது 99 சதவீத பள்ளிகளில் இணையதள வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2024-25-ல் 82.5 சதவீத பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் அமைந்துள்ளன. மத்திய அரசு வெளியிட்டு வரும் ஆய்வறிக்கைகள் தமிழகம் முதலிடத்தில் இருப்பதை தொடர்ந்து வெளிப்படுத்தி வருகின்றன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# இன்று முதல் 2 நாட்களுக்கு வெப்பம் 4 டிகிரி உயர வாய்ப்பு

**சென்னை, மார்ச்.27:** தமிழகத்தில் நாளை முதல் 2 நாட்களுக்கு 4 டிகிரி வரை வெப்பநிலை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

இதுகுறித்து வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் இன்றும், நாளையும் வறண்ட வானிலை நிலவக்கூடும். மார்ச் 28-ம் தேதி முதல் 31-ம் தேதிவரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் இன்று அதிகபட்ச வெப்பநிலை இயல்பை ஒட்டியே இருக்கக்கூடும். நாளை முதல் அடுத்த 2 நாட்களுக்கு தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் 2 முதல் 4 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்கக் கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 34 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கக் கூடும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அண்டை மாநிலங்களிலிருந்து போதைப் பொருள் கடத்தப்படுவதாக தகவல்: எல்லையில் போலீஸ் கண்காணிப்பு தீவிரம்




**சென்னை, மார்ச்.27:** அண்டை மாநிலங்களிலிருந்து தமிழகத்துக்கு போதைப் பொருள் கடத்தப்படுவதாக கிடைத்த தகவலையடுத்து, தமிழக எல்லையில் போலீஸார் கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளனர்.

தமிழகத்தில் அடுத்த மாதம் 23-ம் தேதி சட்டப்பேரவை தேர்தல் வாக்குப் பதிவு ஒரே கட்டமாக நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் முழு வீச்சில் செய்து வருகிறது.

மேலும் காவல் துறை உட்பட அனைத்து அரசு துறைகளும் தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றன. போலீஸாரும் தேர்தல் தொடர்பான பணிகளில் அதிகளவில் கவனம் செலுத்தி வருகின்றனர். இதைப் பயன்படுத்தி அண்டை மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகா, கேரளா உள்ளிட்ட மாநிலங்களிலிருந்து தமிழகத்துக்கு சட்ட விரோதமாக போதைப் பொருட்கள் மற்றும் கள்ளச் சாராயத்தை சிலர் கடத்தி வருவதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இதையறிந்த போலீஸ் அதிகாரிகள் மாநில எல்லையில் கண்காணிப்பை தீவிரப்படுத்த உத்தரவிட்டனர். அதன்படி, கண்காணிப்பு மற்றும் ரோந்துப் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது.

மேலும் அண்டை மாநிலங்களிலிருந்து தமிழகம் வரும் ரயில், பேருந்துகளையும் போலீஸார் உன்னிப்பாக கண்காணித்து வருகின்றனர். கடத்தல் தொடர்பாக தகவல் கிடைத்தால் அதுகுறித்து காவல் துறைக்கு தகவல் தெரிவிக்க பொதுமக்களை காவல் துறையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# கொளுத்தும் கோடை வெயில்; அகரம் கிராமத்தில் மண்பானை வனையும் பணி தீவிரம்



ஊத்துக்கோட்டை:கோடை வெயில், அக்னி நட்சத்திரம் ஆரம்பமாக உள்ளதால், அகரம் கிராமத்தில் மண்பாண்ட தொழிலாளர்கள் பானைகள் செய்யும் பணியில் மண்பாண்ட தொழிலாளர்கள் தீவிரமான ஈடுபட்டுள்ளனர். அவர்கள் பானை செய்யும் இயந்திரத்தை அரசு வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளனர். வருகின்ற மே4ம் தேதி அக்னி நட்சத்திரம் தொடங்கி 28ம் தேதி முடிவடைகிறது. ஆனால், தற்போதே அக்னி நட்சத்திரம் தொடங்கியுள்ளதால், வெயிலின் தாக்கம் அதிகளவு காணப்படுகிறது. இதனால், மக்கள் இளநீர், மோர், பழ ஜூஸ்கள், கூழ், குளிர்பானங்கள் ஆகியவைகளை அருந்தி உடல் வெப்பத்தை தணித்து வருகின்றனர்.

வசதி படைத்தவர்கள் வீடுகளில் குளிர்சாதன பெட்டியில் தண்ணீர் வைத்து அதை குடித்து வருகிறார்கள். ஆனால், ஏழை, எளிய மக்களுக்கு என்றுமே 'மண் பானை' தான் குளிர்சாதனப் பெட்டி. இதில், தண்ணீர் பருகினால் எந்தவித நோயும் தாக்காது. இதனால் மண் பானை தண்ணீரையே மக்கள் பெரிதும் பயன்படுத்துவார்கள். இந்நிலையில், பெரியபாளையம் அருகே அகரம், ஆரணி, தண்டலம் மற்றும் ஊத்துக்கோட்டை கலைஞர் தெரு, பேருந்து நிலையம் எதிரிலும், ஊத்துக்கோட்டை அருகே புதுகுப்பம், பாலவாக்கம் போன்ற பகுதிகளிலும் மண்பாண்ட தொழிலாளர்கள் கோடை வெயிலுக்காக மண்பானைகள் செய்யும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

இதுகுறித்து மண்பாண்ட தொழிலாளர்கள் கூறுகையில், 'கோடைக்கு தொடங்குவதற்கு 2 மாதத்திற்கு முன்பே எங்களுக்கு பானைகள் செய்வதற்காக ஆர்டர்கள் கிடைக்கும். ஆனால், இந்த முறை தற்போது தான் பானைகள் செய்ய ஆர்டர் வர தொடங்கியுள்ளது. இங்கிருந்து சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு பானைகளை மொத்தமாகவும், சில்லரையாகவும் வாங்கிச்செல்வார்கள். ஒரு பானையின் விலை ரூ.50 முதல் ரூ.200 வரை விதவிதமாக விற்பனையாகும். எனவே, தமிழ்நாடு அரசு பானை செய்யும் இயந்திரம் வழங்க வேண்டும். மேலும், அரசு மண்பாண்ட தொழிலாளர்களுக்கு மாணியம் வழங்க வேண்டும் என கூறினர்.

# கோயில் சொத்து பத்திரப் பதிவு அரசாணை வாபஸ்: உயர் நீதிமன்றத்தில் அரசு தகவல்



**மதுரை, மார்ச்.27:** கோயில் சொத்துகளை பத்திரப் பதிவு செய்யும் வகையில் பிறப்பிக்கப்பட்ட அரசாணை திரும்ப பெறப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்ததால் அந்த அரசாணைக்கு எதிரான மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

சேலத்தைச் சேர்ந்த ராதாகிருஷ்ணன், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: தமிழகத்தில் கோயில் நிலங்களை பாதுகாக்கும் வகையில் பத்திரப் பதிவுத் துறையில் கோயில் நிலங்களின் மதிப்பீட்டை ‘பூஜ்ஜியம் மதிப்பு’ எனபதிவு செய்யப்படுவது வழக்கம்.

இதனால் கோயில் நிலங்களை வேறு யாரும் பத்திரம் பதிவு செய்யவோ, பட்டா பெறவோ முடியாது. கோயில் நிலங்களை யாராவது பத்திரப பதிவு செய்ய முயன்றால் பதிவுத்துறையில் புகார் அளித்து பதிவு ரத்து அல்லது பதிவு நிறுத்தம் செய்து வைக்கப்படும்.

இந்நிலையில் கோயில் சொத்துகளை பத்திரப்பதிவு செய்யவும், பட்டா பெறவும் வழிவகை செய்யும் வகையில் வருவாய்த்துறை 2025-ம் ஆண்டு ஆக.29-ல் அரசாணை பிறப்பித்துள்ளது.

இந்த அரசாணை அடிப்படையில் கோயில் சொத்துகள் தொடர்பாக முறையீடு செய்ய வேண்டும் என்றால், மூத்த ஐஏஎஸ் அதிகாரிகள் கொண்ட குழுவிடம்தான் முறையிட முடியும்.

இந்த அரசாணை கோயில் சொத்துகள் தனிநபர்களுக்கு எளிதாகப் பெயர் மாற்றம் செய்ய வழிவகுக்கிறது. இது சட்டவிரோதம். இது அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிரானது. பட்டா நிலம், மானிய நிலம், ஊழிய நிலம் என்ற வகைப்பாடுகளில் கோயில் நிலங்கள் உள்ளன. புதிய அரசாணையால் கோயில் சொத்துகள் பறிபோகும் நிலை ஏற்பட்டுள்ளது.

அதனால் அரசாணையை ரத்து செய்தும், அதுவரை அரசாணையை செயல்படுத்த இடைக்கால தடை விதித்தும் உத்தரவிட வேண்டும். இவ்வாறு கூறப்பட்டிருந்தது. இந்த மனுவை ஏற்கெனவே விசாரித்த 2 நீதிபதிகள் அமர்வு அரசாணையை செயல்படுத்த இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டது.

இந்த மனு நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதிராமன் அமர்வில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது அந்த அரசாணை திரும்ப பெறப்பட்டதாக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து மனுவை நீதிபதிகள் தள்ளுபடி செய்தனர்.


## சிறப்பு உபன்யாசம்



தஞ்சாவூர் மகர்நோம்புச்சாவடி V.P. கோவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீ அலமேலு மங்கா ஸமேத ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாள் திருக்கோவிலில் நேற்று (25.03.2026) புதன்கிழமை மாலை 6 மணிக்கு ஸித்தன்வாழூர் ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீராம சாஸ்திரி அவர்களின் ஸ்ரீதேவீ பாகவதம் கூறும் ஸ்ரீ ராம சரித்ரம் எனும் தலைப்பில் உபன்யாசம் நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள், தஞ்சை ஸ்ரீராமகிருஷ்ண மடம் மற்றும் உபயதார்கள் செய்து இருந்தனர்.

## வசந்த நவராத்திரி 6-ஆம் நாள் உற்சவம்





கீழ்பென்னாத்தூர் மார்ச் -26 ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் வசந்த நவராத்திரி உற்சவம் 6-ஆம் நாள்( செல்வ வளர்ச்சி )ஸ்ரீ மீனாட்சி அம்மனுக்கு சிறப்பு பூஜை, அபிஷேகங்கள் ரோஜாப்பூ, சாமந்திப்பூ மாலைகளால் அலங்கரித்து, தாமரைப் பூக்களால் அலங்காரங்கள், வேத மந்திரங்கள் ஒலிக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் வசந்த நவராத்திரி உற்சவத்தில் கலந்துகொண்டு மீனாட்சி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

# தமிழகத்தில் டெங்கு பாதிப்பை குறைக்க உடனடி நடவடிக்கைகளை அதிகரிக்க சுகாதாரத் துறை அறிவுறுத்தல்



**சென்னை, மார்ச்.27:** டெங்கு பாதிப்பைக் குறைக்க கண்காணிப்பு, நோய் தடுப்பு நடவடிக்கைளை அதிகரிக்க வேண்டும் என்று அனைத்து மாவட்ட சுகாதார அதிகாரிகளுக்கும் தமிழக பொது சுகாதாரத் துறை இயக்குநர் சோமசுந்தரம் அறிவுறுத்தியுள்ளார்.

தமிழகத்தில் 2025-ம் ஆண்டில் டெங்கு காய்ச்சலை பரப்பும் ‘ஏடிஸ் - எஜிப்டி’ வகை கொசுக்களின் பெருக்கம் அதிகரிப்பால், நாட்டிலேயே அதிகபட்சமாக தமிழகத்தில் 20,866 பேர் டெங்குவால் பாதிக்கப்பட்டனர். 12 பேர் உயிரிழந்தனர். டெங்கு பரவலைக் கட்டுப்படுத்த தமிழக சுகாதாரத்துறை பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தாலும், நடப்பாண்டிலும் டெங்குவால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், அனைத்து மாவட்ட சுகாதார அதிகாரிகளுக்கும் தமிழக பொது சுகாதாரத்துறை இயக்குநர் சோமசுந்தரம் அனுப்பியுள்ள சுற்றறிக்கை: அதிக வெப்பநிலை, சீரற்ற மழைப்பொழிவு, வானிலையில் ஏற்படும் அசாதாரண மாற்றங்கள், வைரஸ் கிருமிகள் பரவல் ஆகியவை டெங்கு காய்ச்சலைப் பரப்பும் ஏடிஸ் வகை கொசுக்கள் உற்பத்திக்கு காரணமாக உள்ளன. தமிழகத்தில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு டெங்கு பாதிப்பு தீவிரமாக இருந்தது. உள்ளாட்சி அமைப்புகள், சுகாதாரத்துறையின் ஒருங்கிணைந்த செயல்பாடுகளின் காரணமாக கடந்த ஆண்டு பாதிப்பு விகிதமும், இறப்பு எண்ணிக்கையும் வெகுவாகக் குறைந்தன. அதேபோல், நடப்பாண்டிலும் மேலும் குறைப்பதற்கு வழக்கமான மேற்கொள்ளப்படும் கண்காணிப்பு மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கைகளை அதிகரிக்க வேண்டும்.

அதன்படி, சுகாதார இணையதளத்தில் டெங்கு பாதிப்புகள் குறித்த விவரங்களை உடனுக்குடன் பதிவேற்ற வேண்டும். அப்போதுதான் உரிய நேரத்தில் தகவல்கள் கிடைத்து, டெங்கு பரவலைத் தடுக்க முடியும். நோய் பரப்பும் பூச்சிகள், கொசுக்களைக் கண்காணித்து, அதன் உற்பத்தியை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பரிசோதனை உபகரணங்கள் போதிய எண்ணிக்கையில் இருப்பு இருக்க வேண்டும். கொசு உற்பத்திக்கு இடமளிக்காத வகையில் வீடுகள், தொழில் நிறுவன வளாகங்களை பராமரிக்க வேண்டும். மேலும் பொதுமக்களிடம் டெங்கு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட் டுள்ளது.

# கொடைக்கானலில் இரவு நேரத்தில் உலா வரும் காட்டெருமைகள்: பொதுமக்கள், சுற்றுலாப் பயணிகள் பீதி



**கொடைக்கானல், மார்ச்.27:** கொடைக்கானலில் இரவு நேரத்தில் காட்டெருமைகள் உலா வருவதால் பொதுமக்கள், சுற்றுலாப் பயணிகள் பீதி அடைந்துள்ளனர். அவைகளின் நடமாட்டத்தை வனத்துறை கட்டுப்படுத்த வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கொடைக்கானல் மலைகளின் இளவரசி என அழைக்கப்படுகிறது.

பிரசித்தி பெற்ற இந்த சுற்றுலாத் தலத்திற்கு தமிழகம் மற்றும் வெளிமாநில, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிக எண்ணிக்கையில் வருகை தருகின்றனர். கோடை சீசன் மற்றும் விடுமுறை காலங்களில் கூட்டம் களைகட்டும். கொடைக்கானலில் 60 சதவீதம் வனப்பகுதியாக உள்ளது.

இங்கு ஏராளமான வனவிலங்குகளும், அரிய வகை பறவைகளும் வசித்து வருகின்றன. இந்நிலையில், வனப்பகுதியை விட்டு வெளியேறும் காட்டெருமைகள் நகர்ப்பகுதிகளில் உலா வருவதும், குடியிருப்பு பகுதிகளில் முகாமிடுவதும் வாடிக்கையாக உள்ளது. இதனால், பொதுமக்களும், சுற்றுலாப் பயணிகளும் ஒருவித அச்சத்துடன் உள்ளனர்.

கடந்த சில தினங்களாக பஸ்நிலையத்தில் இரவு நேரங்களில் காட்டெருமைகள் உலா வருகின்றன. நேற்று இரவு பஸ்நிலைய பகுதியில் காட்டெருமை கூட்டம் திடீரென உலா வந்தது.

பஸ்நிலையத்தில் இருந்த பொதுமக்களும், சுற்றுலாப் பயணிகளும் அலறியடித்து ஓடினர். ஒரு சிலர் காட்டெருமைகளை போனில் படம் எடுத்தனர். திடீரென ஒருவர் காட்டெருமையின் பின்னால் கைகளால் தாக்கினார். இதனால், அது மிரண்டு ஓடியது. இதனால், பஸ்நிலையத்தில் நின்றிருந்த பொதுமக்கள் அச்சமடைந்தனர். எனவே, கொடைக்கானலில் இரவு நேரத்தில் உலா வரும் காட்டெருமைகளை கட்டுப்படுத்த வனத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# திருப்பூர் அருகே வேஸ்ட் குடோனில் பயங்கர தீ: துணிகள் எரிந்து நாசம்



**திருப்பூர், மார்ச்.27:** திருப்பூர், மங்கலம் அடுத்த வேட்டுவபாளையத்தில் சுப்பிரமணி என்பவருக்கு சொந்தமான கட்டிடம் உள்ளது. அந்த கட்டிடத்தில் இரண்டு பேருக்கு சொந்தமான வேஸ்ட் குடோன் தனித்தனியாக உள்ளது.

அந்த வேஸ்ட் குடோனில் நேற்று இரவு வழக்கம் போல் பணியை முடித்துவிட்டு தொழிலாளர்கள் குடோனை பூட்டிவிட்டு சென்றனர். இந்நிலையில், நள்ளிரவில் திடீரென குடோனில் இருந்து கரும்புகை வெளியேறியது. இதைப்பார்த்த அக்கம் பக்கத்தினர் பல்லடம் தீயணைப்பு துறைக்கு தகவல் அளித்தனர். தீயணைப்பு வாகனம் வருவதற்குள், தீ மளமளவென பற்றி எரிய தொடங்கியது.

தொடர்ந்து தீயணைப்பு துறையினர் இரண்டு வாகனங்கள் 3 தண்ணீர் லாரி மூலம் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். இந்த தீ விபத்தில் பல லட்சம் மதிப்பிலான துணிகள் எரிந்து சாம்பலானது.




# “நிதிஷ் குமாருக்கு ஏற்பட்ட நிலைதான் பழனிசாமிக்கும் வரும்” – அமைச்சர் சிவசங்கர்

**சென்னை, மார்ச்.27:** “பிஹாரில் நிதிஷ் குமாருக்கு ஏற்பட்ட நிலைதான் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கும் வரும்” என்று தமிழக போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் விமர்சித்துள்ளார்.

சென்னையில் இன்று (வியாழக்கிழமை) செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் சிவசங்கர் திமுக கூட்டணியின் பலம், அதிமுக தலைமையிலான என்டிஏ கூட்டணியின் பலவீனம் என்று பட்டியலிட்டுப் பேசி, மக்கள் ஏன் மீண்டும் திமுக ஆட்சியை ஆதரிக்க வேண்டும் என்று விளக்கினார்.

அமைச்சர் சிவசங்கர் பேசியதாவது: எடப்பாடி பழனிசாமி கட்சிக்குள் தனக்கிருக்கும் சிக்கல்களை மறைப்பதற்காக மீண்டும் மீண்டும் திமுக மீது தவறான விமர்சனங்களை முன்வைக்கிறார். ஒரு காலத்தில் வட இந்திய கட்சிகள் அதிமுக தலைவர் வீட்டு வாசலில் காத்திருந்ததுபோய், இன்றைக்கு ஒவ்வொரு முடிவையும் டெல்லிக்கு பறந்து சென்று எடுத்துவருகிறார் எடப்பாடி பழனிசாமி. அப்படிப்பட்டவர் திமுக கூட்டணியையும், அரசையும், முதல்வரையும் தேவையில்லாமல் விமர்சித்து வருகிறார்.

ஒவ்வொரு முறையும் டெல்லி சென்றுவந்த பின்னர் ஒவ்வொரு கட்சிக்கும் எத்தனை இடங்கள் என்பதை அறிவிக்கும் சூழலில்தான் அவர் இருக்கிறார். அது தமிழ்நாட்டு மக்களுக்குத் தெளிவாகத் தெரியும். அவர் மட்டுமல்ல, அவருடைய கூட்டணியில் உள்ள அமமுக, பாமக உள்ளிட்ட கட்சித் தலைவர்களும் கூட டெல்லிக்கு போய்வந்த பின்னர் தான் தங்களின் பிரச்சினைகள் தீர்ந்தது என்று வெளிப்படையாகச் சொன்னார்கள்.

இப்படி எல்லாவிதத்தில் அவருடைய கூட்டணியில் இருப்பவர்களே, கூட்டணிக்கு தலைமை பாஜக, தலைவர் அமித் ஷா என்று உணர்த்தி வருகின்றனர். அப்படியிருக்க அவர் திமுக-வை அடிமைக் கூட்டணி என்பது தேவையற்ற விமர்சனம், அதுவும் குறிப்பாக அவர் விடுதலை சிறுத்தைகள் கட்சியை விமர்சித்து வருகிறார். அக்கட்சி படிப்படியாக தேர்தல் களத்தில் சவால்களை சந்தித்து வளர்ந்த கட்சி. அதன் தலைவர் திருமாவளவன் ஒவ்வொரு முறையும் தேர்தல் களத்தில் வெற்றியை நிரூபித்து வருகிறார்.

நல்லுறவோடு உள்ள எங்களின் திமுக கூட்டணியை பழனிசாமி விமர்சிக்கிறார். ஆனால், அவர் கூட்டணியில் பாஜகவுக்கு கூடுதல் இடங்கள் கொடுத்ததோடு, இந்தமுறை கூட்டணிக் கட்சிகள் தாமரைச் சின்னத்தில் போட்டியிடவும் வழிவகுத்துள்ளார். பாஜக, தமாகா மட்டுமல்லாது ஜான்பாண்டியனின் கட்சி, புதிய நீதிக் கட்சியும் கூட தாமரைச் சின்னத்தில் போட்டியிடுகின்ற நிலை வந்துள்ளது. தமிழகத்தில் நோட்டாவுக்கு கீழே வைக்கப்பட்டிருந்த தாமரைக்கு பழனிசாமி மிகப்பெரிய இடத்தைக் கொடுத்திருக்கிறார்.

எதிர்காலத்தில் பிஹாரில் நிதிஷ் குமாருக்கு ஏற்பட்ட நிலை, மகாராஷ்டிராவில் சிவ சேனா, சரத் பவார் கட்சிகள், கோவாவில் மாநிலக் கட்சிகள் சந்தித்த நிலைதான் பழனிசாமிக்கும், அதிமுகவுக்கும் ஏற்படப்போகிறது.

இப்படிப்பட்டச் சூழலில் அதிமுக தொண்டர்களின் சுய மரியாதையை காப்பதுதான் திராவிடக் கட்சி என்று சொல்லும் அக்கட்சி எடுக்கும் சரியான நடவடிக்கையாக இருக்கும். இபிஎஸ் என்னதான் மேக் அப் போட்டு மறைத்தாலும் அவருடைய ஒவ்வொரு முடிவுக்குப் பின்னாலும் அமித் ஷா தான் இருக்கிறார் என்பது கிராமங்கள் வரைக்கும் தெரியும். அதிமுக என்பதை அடிமை திமுக என்ற நிலைக்கு கொண்டு சென்றுவிட்டார் என்பதுதான் கட்சியினரே சொல்வதாக உள்ளது. அமித் ஷா கொடுக்கும் ஸ்க்ரிப்ட்டை மாற்றிவிடாமல் அப்படியே பழனிசாமி வாசிக்கிறார்.

மோடியா - லேடியா? என்று பாஜகவுக்கு சவால்விட்டவர் ஜெயலலிதா. ஆனால் இன்றைக்கு மோடி தான் எல்லாமே என்று சொல்லி மறைந்த ஜெயலலிதாவின் ஆன்மாவையே சாகடிக்கும் அளவுக்கு பழனிசாமி நடந்து கொள்கிறார்.

இந்த நேரத்தில் ‘டெல்லிக்கு தமிழ்நாடு அவுட் ஆஃப் கன் ட்ரோல்’ என்று உரத்த குரலில் சொல்லிக் கொண்டிருக்கும் திமுக தலைவர் தலைமையில் தமிழக மக்கள் ஒன்றுதிரண்டு கொண்டிருக்கிறார்கள். திமுக 2.0 மீண்டும் மலரக் கூடிய சூழலில், கூட்டணிக் கட்சிகளுக்கு உரிய மரியாதை கொடுத்து, எத்தனை முறை வேண்டுமானாலும் பேசி மனநிறைவோடு கூட்டணி ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின, தொகுதி ஒப்பந்தங்களும் சுமுகமாக நடைபெறுகிறது.

என்டிஏ கூட்டணி அமித் ஷா வாயசைவுக்கு ஏற்ப இயங்குகிறது, திமுக கூட்டணி சுயமரியாதையுடன் இயங்குகிறது, இந்தக் கூட்டணி மகத்தான வெற்றி பெறும். இவ்வாறு அமைச்சர் சிவசங்கர் பேசினார்.

# திமுகவை நம்பியவர்கள் நடுரோட்டில் நிற்பார்கள்: மயிலாப்பூர் பிரச்சாரத்தில் பழனிசாமி ஆவேசம்

“அங்கீகாரம் இல்லாத கட்சிகளுக்கு அதிகம் இடம்; அங்கீகரிக்கப்பட்ட விசிக-வுக்கு குறைந்த தொகுதி. இனியாவது உணர்ந்துகொள்ளுங்கள், திமுக-வை நம்பியவர்கள் நடுரோட்டில் நிற்பார்கள்” என்று, மயிலாப்பூரில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி தெரிவித்தார்.

அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி தேர்தல் அறிவிப்புக்குப் பிறகான தனது தேர்தல் பிரச்சாரத்தை, வளர்பிறை முகூர்த்த நாளான நேற்று மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலில் வழிபாடு செய்து, மயிலாப்பூர் தொகுதிக்கு உட்பட்ட மந்தைவெளி புனித மேரி சாலையில் திரண்டிருந்த மக்கள் மத்தியில் மேற்கொண்டார். அப்போது அவர் பேசியதாவது:

நான் ஏற்கெனவே 193 தொகுதிகளில் மக்களை சந்தித்து வாக்குகளை சேகரித்தேன். அது மிகப்பெரிய வெற்றியைக் கொடுத்தது. இறைவன் அருளால் அதிமுக தலைமையிலான தே.ஜ.கூட்டணி 210 இடங்களில் வென்று, அதிமுக அறுதிப்பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கும். திமுக-வின் நிலை இன்று பரிதாபமாக உள்ளது. திமுக கூட்டணி அமைப்பதற்கு 20 நாட்களாகப் போராடினார்கள். ஒவ்வொரு கட்சியும் பதறிக்கொண்டிருக்கிறது. அவர்கள் போராடியே தொகுதி பெறும் அவல நிலை உள்ளது. திமுக கூட்டணிக் கட்சிகள் அடிமையாக உள்ளனர். ஆனால், அதிமுக கூட்டணித் தலைவர்கள் சுதந்திரமாக உள்ளனர்.

எப்போது பார்த்தாலும் கொள்ளை அடிப்பதுதான் குறிக்கோள். கலெக்‌ஷன், கமிஷன், கரப்ஷன் இதுதான் அவர்களின் தாரக மந்திரம், இதைத்தான் 5 ஆண்டுகளாகச் செய்தார்கள். ஸ்டாலின் ஆட்சியில் முதல்வர் ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி, மருமகன் சபரீசன், மனைவி துர்கா என்று 4 அதிகார மையங்கள் உள்ளன. இவற்றுக்கு முடிவுகட்டக்கூடியது தான் வரக்கூடிய தேர்தல். நாடு செழிக்க வேண்டுமென்றால் சட்டம் - ஒழுங்கு சிறப்பாக இருக்கவேண்டும். அப்படி இல்லாமல் தமிழகம் சீரழிகிறது என்றால் இதற்கு காரணம், திறனற்ற முதல்வர் ஆள்கிறார். எனவே, இந்த குற்றங்களை எல்லாம் தடுப்பதற்கு அதிமுக தலைமையிலான தே.ஜ.கூட்டணி மிகப்பெரிய வெற்றி பெற வேண்டும்.

இந்தத் தொகுதி நமது கூட்டணியில் பாஜக-வுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. பாஜக-வின் வேட்பாளருக்கு தாமரை சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற வையுங்கள். சென்னை மாநகரத்தில் மற்ற தொகுதிகளில் போட்டியிடும் அதிமுக-வுக்கு இரட்டை இலை சின்னத்திலும், பாமக போட்டியிட்டால் மாம்பழம் சின்னத்திலும், அமமுக வேட்பாளர் போட்டியிட்டால் குக்கர் சின்னத்திலும் வாக்களியுங்கள். அவர்களை வெற்றி பெறச் செய்யுங்கள் மக்களைக் காப்போம் தமிழகத்தை மீட்போம். ஸ்டாலின் மாடல் அரசு ஃபெயிலியர் மாடல் அரசு. பை பை ஸ்டாலின். இவ்வாறு அவர் பேசினார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM